# சிந்தனை

மாட்சிமை தங்கிய



…ட்வர்ட் மன்னர்.

OFFICE OF THE [illegible]
21 AUG 1936
MADRAS

JL
ഞ211,N35cN
N136.2 8.
199932

விலை 9 பை. * மலாய்நாடு 6 காசு.

## உள்ளுரை.


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம். |
| 1. | ஆடிப்பண்டிகை | ... ... | 357 |
| 2. | மன்னரைக்கொல்ல முயற்சி | ... ... | 360 |
| 3. | செய்யுள் பகுதி | ... ... | 361 |
| 4. | மதிப்புரைகள் | ... ... | 363 |
| 5. | எங்கே எனது கணவன்? | ... ... | 365 |
| 6. | தமிழ் மொழியின் தொன்மை | .... | 374 |
| 7. | அக்கப்போர்! | .... .... | 378 |
| 8. | விநோத விவாஹம்! | ... .... | 382 |
| 9. | ஆண் பெண் தன்மை | .... .... | 385 |
| 10. | எதிரொலி | .... .... | 388 |
| 11. | குணவாகடம் | .... .... | 393 |
| 12. | வயிற்றுக்கடுப்பு | .... .... | 397 |
| 13. | மருந்து செய்பகுதி | .... .... | 399 |
| 14. | வேதவியாசர் முதற்காண்டம் | .... | 400 |
| 15. | நாகானந்தன் | | 401 |
| 16. | செய்தித் திரட்டு | .... ... | 407 |


### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ. | 0—8—0 |
| ,, வெளி நாடு | ... | ரூ. | 1—0—0 |
| தனிப்பிரதி | ... | ரூ. | 0—0—9 |
| ஜீவிய சந்தா | .... | ரூ. | 10—0—0 |

புதிதாய் சேருகிற சந்தாதார்களுக்கு அவர்கள் பணம் அனுப்பி சந்தாதாரராய்ச் சேருகிற மாதத்திலிருந்து ஒரு வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பப்படும். சந்தாவை மணியார்டரில் அல்லது ஸ்டாம்பாக அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பினால் 6 அணா அதிகம் செலவாகும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | ரூ. | 5—0—0. |
| ,, அரைப்பக்கம் | ரூ. | 3—0—0. |
| ,, கால்பக்கம் | ரூ. | 1—8—0. |

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி S. I.

21 AUG 1936 MADRAS

# "சித்தன்"

## பழனி.

ஓர் உயரிய மாதப்பத்திரிகை.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

ஆசிரியர்:— C. P. சாமி.

189932

மாலை 2. | ஆகஸ்டு 1936. | மணி 8.

## ஆடிப் பண்டிகை.

நம்நாட்டில் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் பண்டிகைகளின் உட்கருத்தை அநேகர் அறியாதிருக்கின்றனர். இவைகள் நமதுமுன்னோரால் ஏற்படுத்தப்பட்ட நோக்கம் வேறு, தற்போது நடைமுறையில் வந்துகொண்டிருப்பது வேறு. எங்ஙனமெனில், தேசநலத்தையும், சமூக சுகத்தையும், கைத்தொழில், வியாபாரம், இவைகளின் விருத்தியையும் நாடியே நமது முன்னோர் ஒவ்வொரு பண்டிகையையும் ஏற்படுத்தி நடத்திவந்தனர். அக்காலத்தில் கைத்தொழிலும் விவசாயமும், வாணிபமும் சிறப்பெய்திதான் வந்தன. பிறநாட்டவரும் பிரமிப்படையுமாறு நம் நாட்டுக்கைத்தொழில்கள் மென்மேலும் விருத்தியாயின. மக்கள் க்ஷேமமாய் வாழ்ந்துவந்தனர். என்னே அக்காலப் பெருமை! இத்தகைய நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட

பண்டிகைகள் காணா[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] வரு[illegible] இ[illegible] [illegible]
[illegible]? [illegible] [illegible] [illegible]
[illegible] செய்தார்களா? இல்லவே இல்லை.

சென்ற வாரம் நடைபெற்ற ஆடிப்பண்டிகையைப்பற்றி யோசியுங்கள். அன்று விரதமிருந்து, அதிகாலையில் ஸ்நானஞ்செய்து தம்மாலியன்றளவு ஏழைகட்குதவி காட்டிற்கு நலமும், குடிகட்கு க்ஷேமமும் உண்டாகும்படி இறைவனைப் பிரார்த்தித்து சுற்றந்தழுவி சந்தோஷமாயிருக்கும் நாளே அதுவாகும். இதைவிட்டுவிட்டு ஆடி மாதம் பிறந்துவிட்டால் அன்றே தலையாடிப்பண்டிகை என்று கொண்டாடுகின்றனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்வளவு குதூகலம் ஏற்படுகிறது. சிறுவர் சிறுமிகட்குத்தான் என்ன சந்தோஷமில்லையா? ஸ்நானம், பலகாரம் அன்று கொஞ்சம் விசேடமாகவே இருக்கும். அதிலிருந்து பண்டிகை (பதினெட்டு) எப்போ எப்போ என்று எதிர்பார்த்துக்கொண்டே இருப்பர். காரணமென்ன? புது வஸ்திரம் உடுத்தலாம், வயிறு நிறைய பலகாரங்கள் தின்னலாம், விளையாடலாம் என்பது தான் இவர்கள் எண்ணம். இனி புதிதாய் விவாகமானவர்களைப்பற்றிக் கவனிப்போம்.

புது மாப்பிள்ளைகளின் ஜோரே ஜோர். ஆடிப்பண்டிகைக்கு அழைப்புவந்தவுடன் கொஞ்சம் பிகுவுசெய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். தாங்கள் விரும்புவதை எப்படியாவது மாமன் மாமிமார் வாங்கிக் கொடுப்பார்களென்றும் இந்தச் சமயத்தில் ஒரு தட்டு தட்டவேண்டும் என்றும் யோசனை செய்துகொண்டு அது வேண்டும் இது வேண்டும் என்று பிளான் போட்டுவிடுவார்கள். பெண்வீட்டார்கையில் பணம் போதாவிடில் கடன் வாங்கியாவது, வீட்டிலிருக்கும் நகையை அடகுவைத்தாவது புது மாப்பிள்ளைக்கு விருப்பப்படி செய்கின்றனர். ஏனெனில் சுற்றத்தார் ஏசுவார்கள் என்று அவர்கள் பயப்படுகின்றனர்போலும். மாப்பிள்ளை கோபித்துக்கொள்வார் என்று அஞ்சுகின்றனர். மாப்பிள்ளையைப் பிரியப்படுத்தவேண்டி தங்கள் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது கடன்பட்டு மரியாதை செய்கின்றனர்.



கொஞ்ச நாட்கள் சென்றதும் கடன்காரர் தொல்லை பொறுக்கமுடியாமல் கஷ்டப்படுகின்றனர். நகைகளை விற்கிரயம்செய்தும், பாத்திரபண்டங்களை விற்றும் கடன் அனைத்தும் தொலைந்தபாடில்லையே என வருத்தப்படுகின்றனர். இப்பொழுதுதான் பாழாய்ப்போன ஆடிப் பண்டிகையினால் அன்றோ இத்துயர் உண்டாயிற்று என எண்ணுகின்றனர்.

பண்டிகையன்று புதிதாய் வாங்கின உடையுடுத்தி உல்லாசமாய்ச்செல்லும் பெண்டிர்களை நோக்குங்கள். [illegible]னோத விநோதமான சேலைகள் ஜவுளிக்கடைகளில் விலையா[illegible]திருந்த நாட்பட்டபட்டாடைகள் ஒன்றுக்கு இருவிலைக்கு [illegible]டனுக்காகக் கொடுக்கப்பட்டிருப்பதை உடுத்திக்கொண்டு, [illegible]திக்கரை சென்று "கன்னிமார் தெய்வம்" கும்பிடக் [illegible]கூட்டங்கூட்டமாய்ச் செல்வதையும், இவற்றைக்காண ஆட[illegible]வர்கள் பலரும் கூடிச் செல்வதையும் அங்கு நடக்கும் தமா[illegible]ஷாக்கள் விந்தையிலும் விந்தையே. கூட்டமோ பெருங் [illegible]கூட்டம். ஓர் சமயம் குட்டிக்கலகம் ஏற்பட்டாலும் ஆண் [illegible]பெண் சிறுவர் சிறுமிகள் அல்லோல கல்லோலப்பட்டோடு[illegible]வது பரிதாபத்திலும் பரிதாபம்.

கூலி வேலை செய்யும் ஏழை மக்கள் அன்று குடித்துவிட்டு கூத்தாடுவதும், பேளையிலிருக்கும் தெய்வங்கட்கு ஆடு, கோழி பலியிடுவதும் கள்ளு, சாராயம் படைப்பதும், பின் அதைக் குடித்துவிட்டு ஆட்டம்போடுவதையும் பார்த்தால், ஆடிப் பண்டிகையின் விசேடம் தெரியவரும். மக்கள் நிலையைச் சீர்ப்படுத்தி செவ்வையானவழியில் திருப்ப ஒரு சாரார் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலத்திலும் குடிகளும், சண்டைகளும், வம்புகளும், ஆபாசங்களும் நடக்குமானால், இனி என்றுதான் இவைகட்கு விமோசனம் ஏற்படப்போகிறதோ தெரியவில்லை.

ஆகவே ஆடிப் பண்டிகையை, கொலை நாளாக - குடி நாளாக, சண்டை நாளாகச் செய்யாமல் நன்னாளாக - சமாதான நாளாகச் செய்து கொண்டாடுவதே சிறப்புடைத்து என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டுகிறோம்.

(ஆசிரியன்.)

# மன்னரைக்கொல்ல முயற்சி.

## ரிவால்வரை வீசியவன் கைது.

சென்ற மீ 16-உ காலை மாட்சிமைதங்கிய மன்னர் எட்டாம் எட்வர்ட் மெய்காப்புப் படைகளுக்கு கொடிகளை வழங்கும் சடங்கிற்காக ஹைட் பார்க்கில் ஊர்வலமாக வந்து கொண்டிருக்கையில் ஓர் அசம்பாவிதமான சம்பவம் நடைபெற்றது.

மன்னர் குதிரையின்மீது ஏறிச்சென்றார். ஒரு ஆர்ச்சின்கீழ் வரும்போது கூட்டத்திலிருந்த மலைவாசி ஒருவன் மன்னர் மீது எதையோ வீசினானாம். அவ்வஸ்து குதிரையின் விலாப்புறத்தில் பட்டுக்கீழேவிழ அதை குதிரை உதைத்துத் தள்ளியது. அது கீழே விழுந்ததும் ரிவால்வர் என்று தெரிந்தது. மன்னர் அதனைப் பொருட்படுத்தாது ஊர்வலத்தோடு சென்றார்.

குதிரைப்போலீஸ் வீரனொருவன் அவன்மீது குதித்துப்பாய்ந்து கூட்டத்திலிருந்த சிலரது உதவியால் அவனைப் பிடித்துக் கட்டிவிட்டான். அவனுக்கு உதவியாகவந்த மற்றவனும் கைது செய்யப்பட்டு இருவரும் சிறைசெய்யப்பட்டனர். சந்தேகிக்கப்பட்ட இரு பெண்மணிகளும் போலீஸ் விசாரணையில் இருந்துவருகிறார்களாம்.

அந்த ரிவால்வர் 5 குழல் உள்ளதாம். அதில் 4 குண்டுகள் இருந்தனவாம். மன்னர் சிறிது நேரம் கோல்ப் விளையாடிவிட்டுத் தனது செயிண்ட் ஜேம்ஸ் அரண்மனைக்குச் சென்று போஜனமருந்தியபின் வழக்கப்படி தஸ்தவேஜுகளைப் பார்வையிட்டனராம்.

இக்கொடூரச் செய்கையைச் செய்தவன் பெயர் மெக்மாஹன் என்றும், அவன் ஸ்காட்லந்து தேசத்தைச் சேர்ந்தவனென்றும் தெரிகிறது. 'மன்னரைக்கொல்ல முயற்சிக்கவில்லை; அவரது கவனத்தை இழுக்கவே அப்படிச் செய்தேன்' என்று சொல்கிறானாம்.

பெரும் விபத்தினின்றும் மன்னர் தப்பினார்.

**மன்னர் நீடூழி வாழ்க.**

# செய்யுள் பகுதி.

(சாந்தன், மதுரை.)

மகபதி நராபதி நீதிபதி சேதுபதி
வாசற்ப்ர சண்டவாக்கி

வடிதமிழ் சோமசுந் தரகுருசு வாமியடி
மைக்குமடி மைக்குமடிமை

மயில்வா கனக்கடவு ளருளினு லுபயசா
மாவிருது கொண்டதுல்யன்

மலையாள ராஜனருள் தந்தபல் லக்குவெகு
மதிபெற்ற சார்வபூமன்

யுகமெலா மகிமைபெறு தஞ்சைமக ராஜனையொ
ரேழடி யழைத்தநிபுணன்

உசிதனஜ ரதுகபா பிருகையாற் றருவரிசை
யொருகையால் வாங்குகவிஞன்

உற்றசிவ கங்கையிற் கவுரிவல் லவராஜ
னுதவுவள நாடுபெற்றோன்

உயரிலங் கைப்பூமி ராஜசமு கத்தினிலு
மொருகோடி வரிசைகொண்டோன்

ககனமூ தண்டவே தண்டபிர் மாண்டங்
கவிப்புகழ் படைத்தவுரவோன்

காசிமுத லாகரா மேச்சுர வரைக்குங்
கவித்துவச நாட்டுவிசயன்

கற்றுச் சொலிக்கும்வரு ஸ்தானு பதிக்குமிரு
கனகதண் டிகைகொடுத்தோன்

கவிமதக் குஞ்சரஞ் சரவணப் பெருமாட்
கவிச்சக்ர வர்த்தியோலை

புகழ்மேவு சிங்கநகர் வளருங் குமரவேள்
பூபனெதிர் கொண்டுகொண்க

பொரவரா வேங்கைகை பாராத தாதுசெம்
　　புக்குளமை யாதசாமி
புவியிலிரு ளாவேம மேய்ந்துவள ராமாடு
　　பொங்கிவே காதகாணம்
பூண்டொடி படாவத்த மறுபடா வுடலேழு
　　பொதிதந்து நீவாழியே.

(அட்டாவதானம் சரவணப்பெருமாட்கவிராயர்)

(இ-ள்.) பொர வரா வேங்கை—பொருதலுக்கு வராத வேங்கை (புலி)—பொன்; கை பாராத தாது—கையைப்பிடித்துப்பார்க்காத தாது (நாடி)—பொன்; செப்புக்கு உள் அமையாத சாமி—தாம்பிரத்தினால் செய்யப்படாத சாமி (விக்கிரகம்)—பொன்; புவியில் இருளா வேமம்—பூமியில் இருட்டாகாத வேமம் (இரா)—பொன்; மேய்ந்து வளரா மாடு—மேய்ந்து வளராத மாடு (காளை)—பொன்; பொங்கி வேகாத காணம்—பொங்கி வேகாத கொள்ளு—பொன்; பூண்டு ஒடிபடா அத்தம்—பொருந்திய ஒடிதல் இல்லாத அத்தம் (பாதி)--பொன்; மறுபடா உடல்—கோரைபடாத உடல் (சரீரம்)—பொன்; (இப்படிப்பட்ட பொன்) ஏழுபொதி தந்து--ஏழு பொதி என்ற அளவு அல்லது மூடி தந்து; நீ வாழியே—நீ வாழ்வாயாக என்பதாம்.

## விவாக முறை.

உயர்ந்த வகுப்பினருள் கலப்பு விவாகம், வரதட்சணை ரத்து போன்ற சீர்திருத்தங்கள் அவசியம். கலப்பு விவாகம் மிகஅவசியம்; இந்துமுஸ்லீம்கள் மதம்மாறுக் கலப்பு மணத்தை அநுமதித்தால் சமூக சமாசம் ஏற்படும்—தீண்டாமையும் ஒழியும்.

—டாக்டர் ராதாகமால் முகர்ஜி

**பினங்கில் 'சித்தன்' கிடைக்குமிடம்.**

**ஸவேரியன் ஸ்டோர்,**

**121, பினங்கு வீதி, பினங்கு.**

# மதிப்புரைகள்.

## நவமணி.

சென்னையினின்று திரு டி. பி. பக்கிரிசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் "நவமணி" என்ற வாரப் பத்திரிகையின் இதழ் வரப்பெற்றோம். இதில் ருசிகரமான கட்டுரைகள், கதை, செய்தித்திரட்டு முதலியன மலிந்து இடைப்பதோடு சீர்திருத்த அவாவும், பொதுஜன, நேர்மையான ஊழியமுமே லட்சியமாகக்கொண்டுள்ள இத்தமிழ் வாரப்பதிப்பைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டியது இன்றியமையாக்கடமையாகும்.

தனிப்பிரதி காலணா. வருடசந்தா ரூபாய் 1.

கிடைக்குமிடம்:— நவமணி ஆபீஸ்,
2/24, மீரான் சாகிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை.

## இந்திய வாலிபன்.

துறையூரினின்றும் வெளியிடப்படும் மேற்கண்ட வாரப் பத்திரிகை வரப்பெற்றோம். இதில் பல அரியகட்டுரைகளும், குறிப்பும், பெரியார் ஜீவிய சரிதைகளும் காணப்படுகின்றன. இது அனைவருக்கும் பயன்படுமென்று நம்புகிறோம்.

தனிப்பிரதி அரையணா. வருடசந்தா ரூ. 1—4—0.

கிடைக்குமிடம்:— இந்திய வாலிபன் காரியாலயம்,
பரிக்கல், இருந்தை போஸ்ட், தென் ஆற்காடு.

## சிட்டி கெஜட்.

மதுரையினின்றும் திரு வேணுகோபால் அவர்களை ஆசிரியராகக்கொண்ட மேற்கண்ட மாதமிருமுறைப் பத்திரிகை வரப்பெற்றோம். இதில் மதுரை, ராமனாதபுர ஜில்லாக்களின் பல முக்கிய செய்திகளும், முற்போக்குள்ள கட்டுரைகளும், குறிப்புகளும் காணப்படுகின்றன. இந்த ஜில்லா வாசிகளுக்கு மிக்க பயன் தரத்தக்கது.

தனிப்பிரதி அரை அணா. வருடசந்தா அணா 12.

கிடைக்குமிடம்:- மானேஜர்,
சிட்டி கெஜட் ஆபீஸ், கீழவெளிவீதி, மதுரை.

## சந்திரோதயம்.

புதுக்கோட்டையினின்று மாதமிருமுறையாக வெளிவரும் இப்பத்திரிகை வரப்பெற்றோம். இதில் பல அரிய கட்டுரைகள், கதைகள் முதலியன நிறைந்து, சினிமா, பெண்மக்கள் பகுதி முதலியனவும் காணப்படுகிறது.

தனிப்பிரதி அணா 2. வருட சந்தா ரூ. 3.

## தியாகி.

கிராம முன்னேற்றங்கருதி தொண்டாற்ற முற்பட அநேகம் பத்திரிகைகளும், ஊழியர்களும் தமிழ் நாட்டுக்கு மிக அவசியம். இவ்வழியில் தொண்டாற்ற முற்பட்ட 'தியாகி'யை முழு மனதுடன் வரவேற்கிறோம். இவ்வாரப் பத்திரிகை உலக விநோதங்கள், செய்தித்திரட்டுகள், பொன்மணிகள், பெரியார் வரலாறு, கதைப்பகுதி முதலியன கொண்டு விளங்குகின்றது. அந்தகாரத்திலும், மூடப்பழக்க வழக்கத்திலும் ஆழ்ந்து கிடக்கும் தமிழருக்கு சுடரொளியாய் தியாகி விளங்கவேண்டுமென்பது எமது பேரவா. பத்திரிகைகள் ஏராளமாயுள்ள இதுகாலை சந்தாவை இன்னும் குறைத்திருந்தால் நலமாயிருக்கும்.

வருட சந்தா ரூ. 3.

கிடைக்குமிடம்:— மானேஜர், தியாகி,
பரிக்கல், இருந்தை போஸ்ட், தென் ஆற்காடு.

## ரங்கூனில்
## 'சித்தன்' கிடைக்குமிடம்.

புவன கதா புத்தகசாலை,
229, பேயர் வீதி,
ரங்கூன்.


# எங்கே எனது கணவன்?

(ஓர் சிறு கதை.)

(கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.)

'விமலா! ஒரு புதிய ஆட்டம் ஆடுவோம்; ஓடி வா! ஓடி வா வா' என்று கமலம் விமலத்தை விளித்தாள். விமலமும் விரைந்து ஓடி வந்தாள். அப்பொழுது மலர்மணம் நிரம்பிய அழகிய பூங்காவனத்தில் கரிய வரிவண்டுகள் நாண்மலர்களில் படிந்து தேனையுண்டும், பறவைகள் மலர்களின் இதழ்களைத் தனது மெல்லிய மூக்குகளினால் கோதியும் தங்கள் தொழில்களைச் செய்துகொண்டு இருந்தன. விமலமும் கமலமும் கூடி அவ்வண்டுகளையும், பறவைகளையும் ஓட்டிவிட்டு அம்மலர்களைக்கொய்து தங்கள் குழல்களில் சூடி குதூகலித்தனர். அத்தருணம் அந்தமிகு மந்தமாருதம் அம்மலர் வனமெங்கும் இனிமையாக வீசிப் புதியமணத்தைப் பூரிக்கச்செய்து கொண்டிருந்தது. அப்புதிய மணம் ரஸிகர்களுக்கும், யௌவன மாதர்களுக்கும் இன்பத்தையும், உற்சாகத்தையும் ஊட்டின.

தீங்கனி பழுத்துப் பரந்த நிழலைத்தருகின்ற பெரியதொரு மாமரத்தின் கீழ் விமலமும், கமலமும், மற்றும் அவர்கள் தோழிமார்களும் ஒன்றுகூடி அமர்ந்தனர். பலவாறு பேசி மகிழ்ந்தபின், கமலம் விமலாவைப்பார்த்து 'அருமைத்தோழீ! நீ கூறிய அப்புதிய விளையாட்டு யாது? அதனை விளையாடலாம் என்றனள்.'

கமலம்:— அவ்விளையாட்டே இதுவரையிலும் யாரும் விளையாடியதே இல்லை. ஆனதால் அது புதியவிளையாட்டாகும். அது 'இங்கு மிகவும் பால்யப்பெண்களாகக் கூடியிருக்கும் நம்முள் விவாகமாயிருப்பவர்கள் தங்கள் கணவன்கள் தற்காலம் இருக்கும் இடங்களைக் குறித்து தாமரையிலையில் எழுதி இரகசியமாய் வைக்கவேண்டும். அவைகளை நம்மில் தலைமையாயிருப்பவள் படித்துப்பார்த்து நெடுந்தூரப் பயணத்திலுள்ள ஊரிலுள்ளவர்களாயின் அவர்களைப்பற்றி ஆச்சரியப்படுவது' என்பது.

இதனைக்கேட்ட விமலா, குத்தலாகக் கமலாவைநோக்கி 'கமலம்! இந்த அற்புதக் குயுக்தி உனக்கு எங்கிருந்துதோன்றியதடி'? என்று கேட்டனள்.

கமலம்:—'யுக்தி தோன்றியவிடமா? இதோ! பார்'என்று மூன்றாம்பிறைபோல் விளங்கும் தனது நெற்றியைத் தொட்டுக்காட்டினள்

பேஷ் நன்றாயிருக்கிறது என்று எல்லாரும் கூறிவிட்டு அங்கு கூடியிருந்த விளையாட்டுச் சிறுமிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தாமரை இலையைப் பறித்துக்கொண்டு தங்கள் தங்கள் கணவர்கள் இருக்குமிடங்களை எழுதத்தொடங்கினார்கள்.

அவர்களுள் மிகவும் பால்ய விதவையான ரமணி என்னும் பெயரிய சிறுமி, தனக்கு விவாகமானதும், தனக்குக் கணவன் இருப்பதும், அவன் எவ்வூரில் இருக்கிறான் என்பதும் ஒருசிறிதுமறியாதவள். அவள் தாமரை இலையில் தன் கணவன் பெயரை எவ்வாறு எழுதக்கூடும்? அவள் அவைகளையறிந்துவரத் தன் தாயார் இருக்கும் இடத்திற்கு விரைந்தோடினாள். அப்போது தனது தாயார் பொழுதுபோக்கிற்காக இராமாயணகாவியத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். தன் அருமைக் குமாரி ரமணி, பெருமூச்செறியவோடிவந்து தன் அருகில் உட்கார்ந்து ஏதோ கேட்க விரும்பியதை அவள் முகக்குறிப்பாலுணர்ந்து, காவியச்சுவடியைக் கீழே வைத்துவிட்டு 'ரமணீ! என் இவ்வளவு வியர்வெடுக்க ஓடிவந்தாய்? கண்ணே! வழியில் ஏதேனும் உன்னை அச்சுறுத்தினவா? விரைதை அறிவி' என்று ஆதரவோடு வினவினள்.

ரமணி:— 'அம்மா! நாங்கள் ஒரு புதிய விளையாட்டு விளையாடுகிறோம். எனக்குக் கலியாணமாயிருக்கிறதா? அப்படியானால் என் கணவன் எங்கே? அவர் எங்கிருக்கிறார்? இவைகளை எனக்கு இப்பொழுது அறிவியுங்கள். நான் விரைவில் திரும்பி என் தோழிகள் தங்கியிருக்கும் பூந்தோட்டத்திற்குப் போய்ச்சேரவேண்டும்' என்றனள்.

தாயார்:— அங்ஙனம் வினவிய தனது அருமைப்புதல்வியை அருகிலழைத்து மடியிலிருத்திக் கலைந்த அவளது அழகிய குஞ்சிகளைத் திருத்தி, உச்சியை முத்தமிட்டு 'ரமணீ! உனக்குக் கலியாணமாயிருக்கிறது. உன் கணவன் சுவர்க்கத்தில் இருக்கின்றார்' என்றனள்.

ரமணி:- தன் தாயின் உரையைக்கேட்டு அவ்வுரையின் உண்மையை உணர்ந்துகொள்ளாமலே, விளையாட்டையே மேலாக மதித்து தாயின் மடியிலிருந்து தடாலென்றெழுந்து தாண்டிக் குதித்துக்கொண்டு விரைந்து பூங்காவை நோக்கி ஓடி, தாமரை இலையில் 'எனது கணவன் சுவர்க்கத்தில் இருக்கிறான்' என்றெழுதிக் கீழே வைத்தனள்.



அந்தோ! ரமணி தான் இளம்பாலிய விதவை என்றும், தனக்கு அறிவு தோன்றாததற்கு முன்னரே குழந்தைக் கல்யாணம் பெற்றோர்களால் செய்யப்பட்டதென்றும், அறியாதவள் என்பதை வாசகர்கள் உணரவேண்டும்.

சங்கேதப்படி விளையாட்டுக் கூட்டத்தின் தலைவி, ஒவ்வொருவர் இலையையும் எடுத்து வாசித்துவிட்டு இறுதியாக ரமணியின் இலையை வாசித்து வியப்படைந்தாள். விளையாட்டின் தலைவி கமலம் "சுவர்க்கம்" என்பது நெடுந்தூரத்தில் உள்ள ஓர் பெரிய நகரமென்றும், மற்றைய தோழிகள் குறித்துள்ள மதுரை, தஞ்சை, சென்னை, காஞ்சி முதலிய நகரங்களைவிட அது அதிக தூரத்தையுடையது என்றும் கருதி, மற்றைய தோழிமார்களின் கணவர்கள் வாழும் ஊர்களைவிட ரமணியின் கணவன் வசிக்கும் ஊரே மிகப்பெரியதும், நெடுந்தூரத்தில் உள்ளதுமானதால் அவள் எழுதிய வாக்கியமே மேலானதென்றும் கூறி பலமாக 'ரமணியின் கணவன் சுவர்க்கத்தில் இருக்கிறார்' என்று வாசித்துக் கைகொட்டிச் சிரித்தாள். எல்லாப்பெண்களும் கமலம் சொன்னதையே சொல்லி அவர்களும் பலமாகக் கைகொட்டி நகைத்தார்கள். அவர்களுள் கூரியபுத்தியும் தெளிவுமுடைய அம்புஜம் என்பவள், தோழிகளின் அசட்டுப்புத்திக்கும், "சுவர்க்கம்" என்பது இறந்துபோனவர் இருக்கும் இடம் என்பதையும் உணராமல், அது பெரியதோர் நகரமென்றும், நெடுந்தூரத்தில் இருக்கிறது என்றும் அர்த்தம்செய்துகொண்டு விளையாட்டுச் செய்ததற்கும் மிகவும் வருந்தி தோழிகள் கூறிய கொடுமொழிக்கும் இரங்கி, ரமணியின் துரதிர்ஷ்டத்திற்கும் நொந்து, சிரிப்பை நிறுத்தி, விளையாட்டை முடித்து யாவரையும் அவரவர்கள் வீடுகளுக்குப் போகச்சொல்லிவிட்டு ரமணியும் தானுமாகத் தனிமையான ஓரிடத்திற்குச் சென்று வீற்றனர்.

ரமணியின் களங்கமற்ற நெஞ்சில்மட்டும் எண்ணத்தின் அலைகள் ஒன்றின்மேல் ஒன்றாகவெழுந்து அல்லோலகல்லோலப்படுத்திக்கொண்டிருந்தன. ரமணி தன் அருகில் வீற்றிருக்கும் அம்புஜத்தை நோக்கி 'பிரிய தோழி! நான் ஒன்று கேட்கிறேன். அதற்கு நீ சரியான விவரம் சொல்லி எனக்கு வழிகாட்டவேண்டும்' என்றனள்.

அம்புஜம் இயற்கையாகவே நல்ல குணமுடையவள்; பிறர் துக்கத்தில் பங்கு எடுத்துக்கொள்ளும் சுபாவமுடையவள்; கலப்பற்ற அன்புடையவள்; யதார்த்தமன்றிக் கள்ளம், கபடு அறியாத நன்னெஞ்சினள். இத்தகைய நன்னெறியுடைய அவள், ரமணி கேட்டதற்குத் தனக்குத் தெரிந்ததைத் தெளிவாகக் கூறுவதாக வாக்களித்தாள்.

ரமணி:— ''அம்புஜம்! 'எனது கணவன் சொர்க்கத்தில் இருக்கிறார்' என்று என் தாயார் கூறினாள். எனக்கு அவரை பார்க்கவேண்டுமென்று ஆசையாய் இருக்கிறது. அங்குச் செல்வதற்கு எனக்கு வழிவகைகளை விவரித்தால் நான் நன்றியுடையவளாக இருப்பேன்'' என்றனள்.

அம்புஜம் ரமணியின் பேதைமைக்குப் பெரிதும் வருந்தினாள். பால்மணம் மாறாத இளம் பாலிகைக்கு அவள் பெற்றோர்கள் கலியாணம் முடித்த கொடுமைக்கு அவர்களைச் சபித்தாள். பாலிய விவாகத்தைச் செய்யும் கொடிய பழக்கத்தைப் பிராமண சமூகம் கைக்கொண்டிருப்பதைப் பழித்துத் தூற்றினாள். அறியாக் குழந்தைக்குப் பெரிய அநீதியை இழைத்து, இறக்குமளவும் ஓயாத கவலையையும் தீராத துக்கத்தையும் உண்டாக்கிய பிராமண சமூகத்தையும், மூட பழக்க வழக்கத்தையும் பாலிய மணத்திற்குச் சாத்திரத்தில் நியாயமிருப்பதாகக்கூறிய கூற்றத்தையும் பலமாகக் கண்டித்துத் தூக்கித்தாள். கடைசியாக அம்புஜம் ரமணியைநோக்கி 'பிரிய ரமணி! நீ சின்னஞ்சிறியவள்; உலக விவகாரத்தை உணரும் சக்தி இல்லாதவள்; உன் தாயார் கூறிய சொர்க்கம் தொலையாத தூரத்திலுள்ளது; அதோ! பார்; தெரிகிறதே பர்வதம், அதனைக்கடந்து செல்லவேண்டும்; வழி மிகவும் பயங்கரமானது; இடையில் காட்டாறுகளையும், கொடி முட்களும் கூரிய கற்களும் நிரம்பிய கொடிய பயங்கர வழியையும் தாண்டவேண்டும். இவைகளைக் கடந்துசெல்வது சின்னஞ்சிறியவளாகிய உன்னால் இயலாது. அதோ! பயங்கரமாகத்தெரிகிற அம்மலையை நீ எப்படிக் கடத்தல் கூடும்? நன்றாக ஆலோசித்துப்பார்' என்று கூறித் தன்பேச்சை முடித்தாள்.

ரமணி:—"அம்புஜத்தை நோக்கி 'அம்புஜம்! நான் அச்சமென்பதை அறியாதவள். மலையும், காட்டாறும், முள்



வழியும் எனக்கொரு பொருட்டல்ல. எனக்கு லட்சியம்தான் பிரதானம். ஆனதால் நான் தைரியத்தை விடப்போவதில்லை' என்று கூறி இருவரும் பிரியாவிடை பெற்றுப்பிரிந்து தத்தம் வீடு சேர்ந்தனர்.

அன்றிரவு ரமணி வழக்கம்போல் உணவுண்டதற்குப் பின்னர், தனது அறையிலிருந்து தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டாள். தான் அலங்காரம் செய்துகொண்டதை வீட்டார் அறியாதபடி மறைத்துக்கொண்டு அறையைச் சாத்திப் படுக்கையில் படுத்து நித்திரை செய்வதுபோல் பாவனை காட்டிப் போர்வையால் தன்னை முழுதும் மூடிக் கொண்டாள்.

தாயார் தனது வீட்டு வேலைகளை முடித்துவிட்டு சமையலறையைப் பூட்டிவிட்டுத் தனது குமாரத்தி அயர்ந்து நித்திரை புரிகின்றாளென்றெண்ணித் தானும் தனதறையில் சென்று சயனித்துக்கொண்டாள். சிறிதுநேரத்திற்கெல்லாம் அவள் நித்திராதேவியின் சுவாதீனப்பட்டு மெய்மறந்தாள். அவள் அறையில் ஏற்றியிருந்த விளக்கு எண்ணெய் தீர்ந்ததால் அவிந்து அறையை அந்தகாரப்படுத்திற்று.

அன்று அமாவாசை நாள். காடாந்தகாரமான பேரிருட்டு. இரவு பத்து மணி. ரமணி தன் படுக்கையை விட்டு எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். யாவரும் நித்திரை செய்துகொண்டிருப்பதை அறிந்து தான் செய்யப்போகும் காரியத்திற்கு அது அனுகூலமாயிருப்பதற்கு மகிழ்ந்தாள். தன்னைப்பிறர் அறியாதவாறு தனது சேலையால் தலைநிறைய முக்காடிட்டுக்கொண்டு காலடி ஓசை படாமல் மெதுவாகத் தெருக்கதவைத் திறந்து வெளியில் வந்து மீண்டும் முன்னிருந்தபடியே கதவை மூடிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்து யாரும் தென்படாததால், தனது கணவனைக்கண்டு களிக்கப் பருவதமிருக்கும் திசையை நோக்கி மெதுவாக நடந்தாள். உயர்ந்த வானில் மின்னுகின்ற சிறிய நக்ஷத்திரங்களின் சிற்றொளியைத்தவிர அந்தகாரிருளில் தனக்கு வழிகாட்டும் வெளிச்சம் வேறொன்றுமே இல்லை. தனது கண்களுக்கு சிறிது தூரத்தில் ஆகாயத்தைத் தொடுவதற்குத் தங்கள் நீண்ட கைகளை உயரத்தில் தூக்கிக்கொண்டிருப்பதுபோல் நீண்டு வளர்ந்த பனை மரங்கள் பிசாசுகளைப்போல் வரிசை

யாக நின்றுகொண்டிருப்பனபோல் [illegible] பதை அறியாத அச்சிறுமி, நெருக்கோ[illegible] கதிர்கள் நிரம்பிய வயல்களில் புகுந்து அ[illegible]லுள்ள சிறு கால் பாதையில் சென்றுகொண்டிருந்தாள். இவள் செல்லும் வழியிலுள்ள நீர் நிறைந்த சிறு குட்டைகளில் வாழும் தவளைகள் தங்கள் களிப்பின் மிகுதியால் செய்த கூச்சல்கள் மத்தளத்தில் பலவகை ஜதிகளை முழக்கம் செய்வதுபோலிருந்தன. ஆந்தைகள் மரக்கிளைகளில் இருந்தபடி தங்கள் குரல்களில் விகாரமாய்க் கூவிக்கொண்டிருந்தது தவளைகளின் ஜதிமுழக்கத்துக்குத் தாங்கள் சந்தோஷித்து 'சபாஷ்' என்று கூறுவதுபோல் இருந்தது.

நீண்ட தூரம் நடந்தறியாத ரமணிக்குத்தனது மெல்லிய பாதங்களில் வலியெடுத்ததால் நடக்கமுடியாதவளாய்ச் சோர்ந்து அங்கிருந்த ஒரு சிறு பாறையின்மீது வீற்று சிரமபரிகாரம்செய்துகொண்டு மீண்டும் பருவதத்தை நோக்கி நடக்கலானாள்.

சிறுமியின் எதிரே அந்நேரத்தில் ஒருவன் எதிர்ப்பட்டான். ஆரம்பத்தில் அவன் வரவு கண்டு ரமணி சிறிது பயந்தாள். எனினும், அவன் அருகில் வந்ததும் தன் வீட்டுக்குத் தினந்தோறும் பிச்சையெடுக்க வரும் பரதேசி என்றறிந்து தைரியங்கொண்டாள். பிச்சைக்காரன் அச்சிறுமியை அகாலத்தில் தனிவழியில் துணையின்றி தனித்து வருவதைக்கண்டு அதிசயித்தான்.

பிச்சைக்காரன்:— அச்சிறுமியை நோக்கி 'அம்மா! நீ மிகவும் சிறுமியாயிருக்கிறாய். இந்தவிருளில் யார் துணையும் இன்றி தன்னந்தனியாக வழிநடக்கக் காரணமென்ன'? என்று வினவினான்.

ரமணி:— 'பரதேசி! எனது கணவன் சொர்க்கத்தில் இருக்கிறார் என்று எனது தாயார் கூறினாள். நான் அவரைக் கண்டு களிக்க வேண்டுமென்ற ஆசையால் [illegible] வழியாக இவ்விரவில் செல்கிறேன்' என்று விடை கூறினாள்.

பிச்சைக்காரன்:— 'சிறுமியே! அறியாமை [illegible] ளாக இருக்கின்றாயே! [illegible] யத்தை செய்ய முயற்சி [illegible]



சொர்க்கத்துக்குச் செல்வது கூடாத காரியம். உன் முயற்சி வீணானது' என்றனன்.

ரமணி:— பிச்சைக்காரனை நோக்கி 'நீ ஏன் அப்படிக் கூறுகின்றாய்? சொர்க்கம் செல்வது கூடாத காரியமா? உன்னால் முடியாதென்றால் பிறர் முயற்சியையும் ஏன் நீ கெடுக்க முந்துகின்றனை'? என்றாள்.

பிச்சைக்காரன்:— அம்மா நீ கூறுவதைப் பார்த்தால் சொர்க்கம் என்பது சமீபத்தில் இருப்பதாகத் தெரிகிறது. என்னுடைய நீண்ட அனுபவத்தில் சொர்க்கம் இருக்கிற திசையைக்கூட நான் அறியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன்' என்றான்.

ரமணி:— பரதேசியே! நீ இவ்வூர் வாசியாயிருந்தும், எழுபது வயதைக் கடந்திருந்தும் சொர்க்கம் இதோ! தெரிகிற இந்த பருவதம் அதற்கப்பால் இருப்பதை அறியாமற் போனது, நீ தெளிவில்லாதவன் என்பதைக்காட்டுகின்றது' என்றனள்.

பிச்சைக்காரன்:— 'அம்மா! நன்று கூறினாய்' நானு தெளிவில்லாதவன்' என்றான்.

ரமணி:— 'நீ தெளிவில்லாதவன் என்று மேலும் கூறி நிரூபித்துக்கொண்டிருப்பதற்கு எனக்கு இப்பொழுது நேரமில்லை. நீ உனது வழியைப் பார்த்துக்கொண்டு போ. நான் என் வழியைப் பின்பற்றிச் செல்கிறேன்' என்று கூறி மேல் நடக்கத்தொடங்கினாள். அங்ஙனம் அவள் சிறிது தூரம் சென்றதும் கால்வலி உண்டாகி ஓர் அடி எடுத்து அப்பால் வைக்கவும் சக்தியற்றவளானாள். அவளுக்குச் சொர்க்கம் நெடுந்தூரம் இருப்பதுபோலவே தோன்றியது. அவள் நடந்தது இரண்டு மைல் தூரத்திற்கு மேலிராது. தான் பத்து மைல் தூரம் நடந்ததாகக் கருதிக்கொண்டாள். அவ்விடத்திலேயே கால்கள் தள்ளாட மெய் சோர்ந்து களைப்பின் மிகுதியினால் ஓர் மரத்தடியில் படுத்துக்கொண்டாள். ஆகாயத்தில் கோகினூர் வைரங்களைப்போல் மின்னிப்பிரகாசிக்கும் தாரகைகள் தன்னைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல் தோன்றின. ரமணி நாணத்தாலும், சோர்வாலும் மயக்கமுற்று மெய்மறந்தாள்.

பிச்சைக்காரன் ரமணி கூறிய வார்த்தைகளுக்கு வருந்தினனெனினும், அச்சிறுமியின்பால் தனக்குள்ள அன்பினாலும், ஆராமையினாலும் இரக்கந்தோன்றி ரமணி சென்ற திசையை நோக்கி விரைந்து நடந்தான். சிறிது தூரம் சென்றதும், ஓங்கி வளர்ந்த ஓர் மரத்தடியில் அச்சிறுமி திக்கற்ற அகதியைப்போல் சோர்ந்து கிடப்பதைக் கண்டான். திடுக்குற்று அவளருகிற்சென்று கூர்ந்து நோக்கினான்; தேகத்தைப் பரீட்சித்தான். வழியிளைப்பினால் சோகித்து மூர்ச்சையடைந்திருப்பதை உணர்ந்து தைரியமடைந்து அச்சிறுமியைத் தனது இரு கைகளாலும் வாரி எடுத்துத் தோள் மீது போட்டுக்கொண்டு ரமணியின் வீட்டை நோக்கி வேகமாக நடக்கலானான்.

ரமணி வீட்டைவிட்டு வெளியேறிய சிறிது நேரத்திற்குள் அடுத்த கிராமத்திற்கு ஓர் காரியமாகச் சென்றிருந்த ரமணியின் தந்தை வீடு திரும்பி, ரமணியின் பெயரைச் சொல்லிக் கதவு தட்டினார். ரமணி வந்தாளில்லை. ரமணியின் தாயார் திடுக்கிட்டு விழித்தெழுந்து வந்து கதவு திறந்தாள். அவர் தனது மனைவியை நோக்கி ரமணி எங்கே என்று கேட்டார். மனைவி, குழந்தை அயர்ந்து தூங்கிவிட்டாள் போலிருக்கிறது. அதனால்தான் நான் வந்து கதவு திறந்தேன் என்றாள். அவர் சரியென்று கொல்லைப்புறம் சென்று கைகால் சுத்தி செய்துகொண்டு ரமணி வழக்கம்போல் படுத்துறங்கும் அறையுட்புகுந்து ரமணியை நோக்கினார். அவள் படுக்கையில் இல்லை. சந்தேகித்து வீடு முழுதும் தேடினார். ரமணி! ரமணி! என்று பலமாகப் பெயர் சொல்லி அழைத்தார்; பதிலில்லை. கலவரமடைந்து பரபரப்புடன் பக்கத்து வீடு, எதிர் வீடு முதலிய இடங்களில் சென்று விசாரித்தார்; அவள் தோழிமார்கள் வீடுகளிற்சென்று கேட்டார். ஒருவரேனும் கண்டவர்கள் இருப்பதாகக் கூறினார்களில்லை. வீடு முழுதும் பெரிய சோதனமாயிருந்தது. ரமணியின் தாயும் தந்தையும் பெருங்குரல் பாய்ச்சி அழுது புலம்பினர். அத்தெருவார் முழுதும் அவ்வீட்டில் கும்பலாகக்கூடிவிட்டனர். யார் வாயிலும் ரமணியின் பேச்சாகவே இருந்தது. இத்தருணத்தில் பிச்சைக்காரன் ரமணியைத் தோளில் சுமந்துகொண்டு ரமணியின் வீட்டுள் நுழைந்தான். அதுகண்டு யாவரும் அதிசயித்து பிச்சைக்காரனைச் சூழ்ந்து



கொண்டு அவனைக் காரணம் விசாரிக்கத் தொடங்கினார்கள். அவன் முதலில் ரமணியின் மூர்ச்சை தெளிவிப்பதற்கு முயலுங்கள்; பின்னர் எல்லாம் விவரிக்கின்றேன் என்றான். ரமணியை ஓர் படுக்கையில் கிடத்தி மூர்ச்சை தெளிவதற்குப்பலவித உபசாரங்கள் செய்தார்கள். குளிர்ந்த நீரை அவள் முகத்தில்தெளித்து விசிறிகொண்டுகாற்றெழும்படி செய்தனர். அவளது அழகிய முகம் மிகவும் வாடி சோம்பி இருந்தது. நீண்டுபரந்த நெடுவிழி சுருங்கி குழிந்திருந்தது. வண்டுபோல் கருத்த அவளது கேசங்கள் கலைந்து சிவந்த நெற்றியிலும், தோள்மீதும், மார்பகத்தும் பரந்து கிடந்தன. மெல்லிய உதடுகள் அசையாமல் மூடியபடியே இருந்தன. குளிர்ந்த நீராலும், விசிறிகொண்டு காற்றெழும்படி வீசியதாலும் ரமணிக்குச்சிறிது தெளிவுற்றதெனினும், கண்களை நன்றாகத் திறக்கமுடியாமல் சிறிது திறந்த கண்களையும் மூடிக்கொண்டாள். மேலும் இங்கிதமொழிகளாலும், தாயின் உருக்கமுள்ள சொற்களாலும், நன்றாகச்செய்த உபசாரங்களாலும் மீண்டுமொரு முறை தனது கண்களைத் திறந்து தாயைநோக்கி மீண்டும் மூடிக்கொண்டாள். முகத்தில் பாதி சோகம் நீங்கியதாகத் தென்பட்டது. சிறிது நாழிகை கழிந்தபின் படுக்கையில் இருந்தபடியே புன்னகை புரிந்து தாழ்ந்த குரலில் "அம்மா! உனக்கெப்படித் தெரிந்தது" என்றாள்.

தாயார்:— 'கண்ணே! ரமணி! நீ கூறியது எனக்கு விளங்கவில்லையே' என்றாள்.

ரமணி! குழறிய மொழியில் 'அம்மா! நான் சொர்க்கத்திற்குச்சென்றது உனக்கெப்படித் தெரிந்தது? அம்மா! சொர்க்கம் எவ்வளவு தூரம்? கால் கடுக்க அந்த நீ எவ்விதம் நடந்துவந்தாய்'? என்று கண்ணீர் வாரக்கூறிச்சோம்பினாள்.

'அம்மா! அம்மா!! எனது கணவன் எங்கே? இனி யவர் இங்கு வரமாட்டாரா?' என்றாள்,

தாயும், தந்தையும் குழந்தை கூறிய சொற்களைக்கேட்டாளாது கண்ணீர் சொரிந்து புலம்பினர்.

ரமணி அதன்பின் பேசவே இல்லை.

# தமிழ் மொழியின் தொன்மை.

(ஸ்ரீமதி A. C. கோமதிநாதன் அம்மாள்,)
அகிலஇந்திய பெண்கள் கல்விச்சங்க ஸ்டாண்டிங் கமிட்டி மெம்பர்.

(முந்திய கட்டுரையில் தமிழ் மொழியின் தோற்றத்தைப் பற்றிக் கூறினோம். இனி அதன் தொன்மையைப் பற்றிக் கூறப்புகுவாம்.)

இவ்வுலகத்தின்கண்ணே பேசப்படுவன ஏறக்குறையத் தொள்ளாயிரம் மொழிகளாம். அவற்றுள்ளே சிலவாகிய பாஷைகள்தான் தொன்மொழிகள் என்னும் பெயர்க்குரியவையாய்க் கருதப்படுகின்றன. அங்கே தன்னுள்ளும் தமிழ் மொழியும் ஒன்று. இதுவேயாம் இப்பொழுது ஆராயவேண்டியது.

பாஷை வழக்கற்று ஏட்டு வழக்காய் பட்டில் நிற்பன தொன்மொழிகள். மற்று இக்காலத்தில் பாஷை வழக்காய் இயங்குவனவெல்லாம் தொன்மொழிகளாகாவென்பது சிலர் துணிபு. இத்துணிபு தர்க்க ஆற்றாதே. பாஷைகள் பாஷை வழக்கற்றுப் போனதற்குக் காரணம் இலிபிகள் ஏற்படாமையும், பாஷை பேசுவோர் பல்வேறிடங்கட்குப் பிரிந்து சென்றமையாலும், இடங்கட்குத் தக்கபடி புது இலிபிகள் வகுத்துக்கொண்டதாலும், பிறகாரணங்களாலுமாம். ஏட்டு வழக்குப்பாஷை பேச்சு வழக்குப்பாஷைக்கு இணங்கி வராவிடில் முன்னது பாஷை வழக்கற்றுத்தன்னிலே வேறுபடாது ஒருநிலைப்பாடடைந்து நிற்கும். பின்னது விரிந்துகொண்டே போய் முன்னதினின்றும் வேறுபட்டு அதன் வழிமொழியெனக் கருதப்படும். ஆகவே பேச்சுவழக்கோடிணங்கி வாராதனவெல்லாம் தொன்மொழிகளோ? அல்ல.

தமிழ் மொழியில் ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்ற எட்டு மெய்யெழுத்துக்களையும் கொண்டு சொற்கள் தொடங்குகின்றன. அஃதாவது இவ்வெட்டும் மொழிக்கு முதலில் வாரா எழுத்துக்களாம். இவைகள் வடமொழிக்கு முதலில்





வரவில்லை. இவ்வெட்டும் நா மேலண்ணத்தைத் தொட்டுத் தானே பிறக்கும் நாவெழுத்துக்களாம். அங்ஙனம் மேலண்ணந்தொட்டு உச்சரித்தற்பொருட்டு வேண்டியபடி முயற்சி மிகுதியாயிருத்தலின் இவ்வெட்டு எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வாராவாயின. இவ்வுண்மை கொண்டு பண்டைக் காலத்தே வழங்கிய மக்களுக்கு உறுப்புக்கள் உறமேறி அரிதுமுயற்சி செல்லாத இளம்பருவத்தே, முற்பட்டுத்தோற்றமுற்றெழுந்த மொழி தமிழேயாமென்றுங் கூறி, அதன் தொன்மை நாட்டி நிறுத்திவிட்டோமென மகிழ்வாருமுளர்.

பின்பு பொன்னிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்து, மணி இவற்றால் அணியப்பட்டதாயும், நகரத்து அரணோடு இணைக்கப்பட்டதாயுமுள்ள பாண்டியர் வாயிற்கதவை வானரர்காள் போய்க்காண்பீர் என வான்மீக முனிவர் கூறி இருக்கிறபடியாலும், வியாச முனிவரும் மகா பாரதத்தின் கண்ணே தமிழ் நாட்டின் சிறப்பையும், பாண்டியர் அரசையும்பற்றிக் கூறுகின்றதாலும், பாண்டியர் ஆண்ட நாட்டின் தொன்மையும், அவர் பேசிய தமிழ் மொழியின் தொன்மையும் ஒருவாற்றாற்றெளியப்படுமாறு காண்க.

இன்றைக்குச் சற்றேறக்குறைய இருபதினாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பழமையான எழுத்துச்சாதனங்கள் காணப்படுகின்றனவாம். ஆயினும் கி. மு. எண்ணாயிரம் வருடங்கட்கு முன்னரே மக்களுக்குள் நாகரிகம் தொடங்கி இருக்கவேண்டும். இவ்வளவு காலம் முன்னரென்பது வரையறுத்துரைக்கமுடியாதாயினும், எழுத்து வழக்கு இதற்கும் முன்னரே ஏற்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறாயின் பாஷைத்தோற்றத்தின் காலம் இத்துணை ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரென்பது யாவரால் வரையறுத்துக் கூறவியலுமோ? அறியேம். பாஷைமூலம், லிபிமூலம், ரிஷிமூலங்கள் போலும்.

இனித் தமிழ் நூல்களில் பல இடைச்சங்கமிருந்த கபாடபுரங்கடல்கொள்ளப்பட்டகாலத்தில் அழிந்துபட்டன எனக் கூறக்கண்டுளேம். அஃதன்றியும் தமிழில் மிகப்பழங்காப்பியமென அறிவுடையோர் பலரும் ஒத்தெடுத்த சிலப்பதிகாரத்தில் காடுகாண் காதையில் ஆசிரியர் இளங்கோவடிகள்

"வடிவேலெறிந்த வான்பகை பொறாது பஃறுளி
யாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடுங்
கொடுங்கடல் கொள்ள"

என்றார். இனி வேனிற்காதையில் நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், என்புழி உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்த வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும், இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன் மலை நாடும், காடும், நதியும், பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலாற் குமரிப் பௌவமென்றார் என்று கூறினார். இன்னும் புறநானூற்றில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியபாட்டில் பஃறுளியாறு வடிம்பலம்ப நின்ற பாண்டியனால் உண்டாக்கப்பட்டதென்பது குறிக்கப்பட்டுள்ளது. சின்னாள் முன்னர் வெளிப்பட்ட செங்கோன்றரைச் செலவு என்றதோர் சிறுநூலினால் சில விஷயங்கள் விளங்குகின்றன. மேல் அடியார்க்கு நல்லாருரையான் விளங்கிய ஏழ்தெங்கநாடு முதலிய பிற நாடுகளும், மணிமலை முதலிய சில மலைகளும் முத்தூர் முதலிய சில ஊர்களும், சச்சரச்சோ பேராற்று நெடுந்துரையன், இடைக்கழிச் செங்கோடன் முதலிய புலவர் சிலரது பெயர்களும், பெருநூல், இயநூல் எனச்சில நூற்பெயரும், அந்நூலாலும், அதனுரையாலும், வெளியாகின்றன. அந்நூல் முதலூழியில் தலைச்சங்கத்தார் காலத்தில் குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையேயுள்ள பெருவளநாட்டரசனாகிய செங்கோனை முதலூழித் தனியூர்ச் சேந்தன் பாடினனென்பது. செங்கோன்றரை செல்வைச் சேந்தன்றனியூரான் தங்கரைமித்தாப் புலிதொடரா-லன் இசைத்தான் சக்காக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி பக்கரக்கோ நாமஞ்சுவாம் என்ற பஃறுளியாற்றுத் தலைப் பாய்ச்சல் ஏழ் வங்கநாட்டு முத்தூர் அகத்தியன் கூறிய பாட்டினாற்புலனாகின்றது.



இவையனைத்தையும் உற்று நோக்குமிடத்து எழுநூற்றுக்காவதம் அகன்றுகிடந்த நாற்பத்தொன்பது தமிழ் நாடுகள் கடல் கொள்ளப்பட்டனவென்பது புலனாகும். இக் காலத்து அளவின்படி ஒரு காவதமென்பது பத்து மைலாக எழுநூறு காவதமும் ஏழாயிரம் மைலெல்லையளவாம்.

இந்துமகா சமுத்திரம் இரு நூற்றைம்பது லட்சம் சதுரமைல் உள்ளது. இதனால் அது சிறிது குறையப்பதினாறு லட்சம் மைல் நீளமும், பதினாறு லட்சம் மைல் அகலமும் உடையதென்று பெறப்படும். எனவே இப்பதினாறு லட்சம் மைல் நீளத்தில் ஏழாயிரம் மைல் அளவு நிலத்தைக் கடல் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இனி மோரீஸ் தீவுக்கும் பம்பாய் நகருக்கும் இடையிலுள்ள நீர்ப்பரவை இரண்டாயிரத்தைந்நூறு மைல் நீளமுள்ளதாம். மோரீஸ் தீவிற்கும் அதற்கும் தெற்கிலுள்ள கெர்க்கியூலன் என்னும் தீவிற்கும் இடையிலுள்ள தூரமும் அவ்வளவேயாம். ஆகவே நீளத்தில் இக்காலத்திலுள்ள குமரி முனையிலிருந்து கெர்க்கிலூலன் தீவின் தெற்கு வரையிலும், அகலத்தில் மடகாஸ்கர் தீவு முதல் சுமத்திரா, ஜாவா முதலியவற்றை உள்ளடக்கிய சந்தாத்தீவுகள் அளவும் விரிந்துகிடந்த குமரிநாடு கடல்கொள்ளப்பட்டது என்பது புலனாகும்.

இக்குமரி நாடுதான் கிழக்கே சந்தாத் தீவுகள் வரையிலும், மேற்கே மடகாஸ்கர் தீவு வரையிலும் அகன்று கிடந்ததாகக் கூறப்படுகிறது. இலெமூரியா என்றொரு நிலப்பரப்பாம். இந்நிலப்பரப்பு ஒரு காலத்தெழுந்த பெரு வெள்ளத்தால் ஆழ்ந்துபோன பெரு நிலம். இப்பெரு நிலம் இவ்வுலகம் முழுவதற்கும் நடுவில் இருந்த பெரும் பரப்பாதலால் மக்கள் முதல்முதல் இந்நிலத்திலிருந்து பின் நாற்றிசையிலும் பிரிந்து சென்று வேறுபட்டனரென்றும், அங்ஙனம் இதிலிருந்த தொல்லோர் வழங்கியது தமிழ்ப்பாஷையாமென்றும் பல காரணங்கள் காட்டி விளக்கியுள்ளார் மேற்சொன்ன புலவர் விஞ்ஞானிகளிலும் ஒருவர். இது கேட்பதற்கு இனிதாகவும் விநோதமாகவும் இருக்கின்றது. இதனால் யாம் மேலேகூறிய தமிழ் நூற்பகுதிகளில் கண்ட விஷயங்களெல்லாம் வலியுறுமாறு காண்க.

# அக்கப்போர்.

(ஸ்கேலிடன்.)

'இதென்னடா! எந்நேரமும் அக்கப்போர் மணியம்,
என்று அநேகர் சொல்லிக்கொள்வதைநான் பதினாயிரந்தடவை
கேட்டிருந்தபோதிலும் அதன் அர்த்தம் வெகு நாள்வரை
எனக்கு விளங்கவில்லை. எத்தனையோ மேதாவிகள், அறி
வாளிகள், வித்வசிரோன்மணிகளெல்லாம் பற்பல அகராதி
களை வெகு சிரமப்பட்டுத் தயாரித்து ஜன சமூகங்களுக்கு
உதவி இருக்கும்போது இப்பதத்தின் பொருளை உணராமல்
இருப்பதின் வெட்கக்கேட்டை என்னால் சகிக்கக் கூடவில்லை.
ஆதலால் எப்படியாவது இதன் கருத்தைத்தெரிந்துகொள்ள
வேண்டுமென்று கங்கணங்கட்டிக்கொண்டேன். அதன் பல
னை இப்போது 'அக்கப்போர்' என் கண்முன்னே தாண்டவ
மாடிக்கொண்டே இருக்கிறது. இப்படிச்சொல்லிவிட்டதால்
நான் என்னவோ மலையைக் கல்லி எலியைப்பிடித்துவிட்ட
தாக எண்ணிவிடாதீர்கள். என்னால் அது முடியாத காரியம்
சந்தேகமிருப்பின் என் பெயரை ஞாபகப்படுத்திக்கொள்
ளுங்கள்.

இனி என் ஆராய்ச்சியைக் கொஞ்சம் கவனிக்கிறீர்களா?
'அக்கப்போர்' என்றால் பாரதப்போரைப் போலிருக்குமா?
இராம-இராவண யுத்தம் போன்றதா? சுப்ரமண்ய-சூரபத்தும
சண்டையை ஒத்ததா? அல்லது சென்ற மகா யுத்தம்
போன்றதா? ஒருவேளை சமீபத்தில் நடந்த இத்தாலி-அபி
சீனிய சண்டைக்கு நிகரானதா? என்று யோசித்து யோசித்து
என் மூளையைப் புண்படுத்தியபோது அப்படி ஒன்றுமில்லை
என்று முடிவு கட்டினேன். ஏனெனில் இப்பேர்ப்பட்ட போர்
களெல்லாம் சரித்திரங்களிலும், புராணங்களிலும் அடங்கி
இருக்கும்போது இவ்வுலகப்பிரசித்தமான 'அக்கப்போர்'
மட்டும் தப்பித்துக்கொள்ள என்ன காரணம்? ஆதலால் இது
ஓர் தனி ரீதியான போர், மறைமுகமான போர், பத்திரிகை
களுக்கடங்காத போர், யுத்த தளவாடங்கள் வேண்டாத
போர், நிரந்தரமான போர், நாகரீகமான போர், மாயாவிநோ





தப்போர், சர்வதேச சங்கத்தில் அடங்காப்போர், தீராப்
போர் என்பது தெளிவாய்விட்டது. ஆஹா! இந்நுட்பத்தை
ஆராய்ந்து வெளிப்படுத்துவதற்குள் என் மூளை எவ்வளவு
கஷ்டநிஷ்டூரங்களை அனுபவித்தது தெரியுமா? காலஞ்
சென்ற மின்சார அரசன் மிஸ்டர் "தாமஸ் ஆல்வா எடிசன்"
துரைமகனார்கூட இவ்வளவு சிரமப்பட்டிருக்கமாட்டார் என்
பதை கோபுரத்தின் மீதிருந்துங்கூறுவேன். அப்படியிருந்
தும் அவருக்கு நோபல் வெகுமதி; எனக்கில்லை என்றால்
இந்தக்கொடுமைக்கென் சொல்வது? நீங்களே சொல்லுங்கள்.
சரி; தொலையட்டும். இனி நமது அக்கப்போரைக் கவனிப்
போம்.

பொதுவாக ஓர் குடும்பத்தை எடுத்துக்கொண்டால்
தலைவன் வருவாய் கருதி வெளியிற்சென்றோ அல்லது இல்
லத்திலோ ஓர் தொழிலில் ஈடுபட்டுவருகிறான். ஆனால்
பெண்ணரசிகள் என்ன செய்கின்றனர்? நாத்திக்கும், நங்
கைக்கும் ஏசல்; மாமிக்கும், மருமகளுக்கும் தர்க்கம்; ஆட
வன் அலுத்து வீடு திரும்பும்போது 'ஓ' வென்ற கூக்குரல்;
இரண்டு பக்கத்திலும் பிராதுகள்; புகார்கள்; ஆர்ப்பாட்
டங்கள். இதுதான் சாமி அக்கப்போர் என்பது. என்னே
வெட்கக்கேடு! சரி; நம் மூதாதைகள் கோவில்களை எதற்கா
கக்கட்டினர்? குளங்களை எதற்காகவெட்டிவைத்தனர்? சாஸ்
திரங்களையும், ஆசார அனுஷ்டானங்களையும் எதற்காக
வகுத்தனர்? எல்லாம் மானிடவர்க்கத்தின் பரஸ்பர நன்மை
கருதியல்லவா? முன்னேற்றங்கருதியல்லவா? ஆனால் இன்று
ஒருவர் உயர்ந்தோரென்றும், ஒருவர் தாழ்ந்தோரென்றும்,
கோவில், குளங்களெல்லாம் தங்கள் பிதிரார்ஜிதமென்றும்,
தென்கலையே உயர்ந்ததென்றும், வடகலையே தாழ்ந்ததென்
றும், ஆரியமே சிறந்ததென்றும், இதர மொழிகள் நீசமென்
றும் கூறிக்கொண்டு சிலர் கடவுளுக்கும், மதத்துக்கும்,
மொழிக்கும் வக்காலத்து வாங்குவதை என்னென்று நினைக்
கிறீர்கள்? அதுதான் அக்கப்போர் என்னும் திருநாமம்
வாய்ந்தது. இன்னொரு சங்கதி பாருங்கள். நாம் ஓரிடத்தி
லிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல ரயில், மோட்டார்,
கப்பல் முதலிய வண்டிவாகனாதிகள் ஏற்பட்டிருப்பதில் ரயி
லின் நோக்கமும், மோட்டாரின் நோக்கமும் ஒன்றுதான்;
ஓரே பயனுடையதுதான். ஆனால் இவ்விரண்டுக்கும் நடை

பெற்றுவரும் போர் ஒன்றுண்டே அதுதான் அக்கப்போர்; ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். மற்றோர் உதாரணம் சொல்லுகிறேன். இந்நாட்டில் ஜனநாயக ஆட்சியென்று கூறப்படும் சட்டசபைகள், ஸ்தலஸ்தாபனங்கள், நகரசபைகள், பஞ்சாயத்து போர்டுகள் முதலியவற்றின் கருத்து என்ன? நமக்கு அரசியல் ஞானம் ஏற்படவும், அதன் பயனாய் நம் நாட்டு நிர்வாகத்தை நாம் ஏற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களாகவுமே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆங்காங்கு நாம் காண்பதென்ன? யாவும் அக்கப்போர்; அக்கப்போர் மணியமல்லவா? என்னே இதன் கொடுமை! இன்னும் ஓர் விஷயம் கேளுங்கள். குபேர நாடாகிய அமெரிக்காவிலிருந்து இந்நாட்டுக்கு முட்டி மோதிக்கொண்டு ஓடோடி வருகிறார்களே அநேக பாதிரிமார்கள், அவர்கள் என்ன சொல்லிக்கொண்டு வருகிறார்களென்றால் 'இந்தியா ஓர் பாமர நாடு; கல்விவாசனை அற்ற நாடு; நாகரீகமில்லாத தேசம்; ஆனால் ஓர் இராமகிருஷ்ணர், ஓர் விவேகாநந்தர் பிறந்த புண்ய பூமி; ஆனாலும் இந்தியமக்களுக்கு கல்வி ஞானம் ஊட்டி நாகரீகம் அடையச்செய்யவேண்டும்' என்று அமெரிக்க சீமான்களிடம் ஏராளமாக நிதி பெற்றுக்கொண்டு இங்குவந்து மதமாற்றம் செய்ய முற்படுகிறார்கள்; இதுதான் அக்கப்போர் என்று சொல்லப்படுவது.

இது இவ்வாறாக, பத்திரிகை உலகத்துக்கு வருவோம். இப்போது எங்கும் தினசரி, வாராந்தர, மாதாந்தர பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தோன்றி இருக்கின்றனவே. இவைகளின் உத்தேசம் என்னவென்றால் சமூகத்தைச் சீர்திருத்தி கல்வி, கேள்வி, ஆராய்ச்சிகளில் நன்கு பயிற்றுவித்து சன்மார்க்கத்தைப் புகட்டவேண்டுமென்பதேயாகும். ஆனால் இப்பாழும் பத்திரிகைகள் சதா அக்கப்போரில் முனைந்து ஒன்றையொன்று திட்டுவதும், பகிஷ்கரிப்பதும். தாக்குவதுமான காரியத்தைச் செய்வதென்றால் அக்கப்போரின் பெருமையை என்னென்று கூறுவது?

இனி அரசியலில் பிரவேசிப்போம். இந்தியாவில் சுயராஜ்யக்கிளர்ச்சி வெகு வேகமாகப் பரவிவருவதன் காரணமாகப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தாரும் சற்று விட்டுக்கொடுக்கவும், சில சீர்திருத்தங்கள் வழங்கவும் முன்வந்தால்



ஒரு சர்ச்சில் துரையும், ஒரு உட் துரையும், ஒரு முள் துரையும், ஒரு கல் துரையும் செய்வதென்ன? சதா அக்கப்போர்; அக்கப்போர். போகட்டும்; அதே விடுதலைப் போராட்டத்தில் உயரிய நோக்கங்கொண்டு உழைத்துவரும் இந்திய தேசிய மகாசபையும், சமூக விடுதலை, தேசிய விடுதலை என்று கூறிக்கொண்டு பாடுபட்டு வரும் சு. ம. இயக்கமும், ஜஸ்டிஸ் கட்சியும் நம் தென்னாட்டில் எந்த நிலைமையில் இருக்கின்றன என்றால் இந்த சர்வ வல்லமையுள்ள அக்கப்போரில் ஈடுபட்டு பொது ஜனங்களை நம்பிக்கை இழக்கும்படி செய்கின்றன. இது எவ்வளவு துர்ப்பாக்கியமான விஷயம்? என்பதை நீங்கள் நன்றாய் யோசிக்கவேண்டும். இதற்கு மேல் என் பேனாவும் ஓடவில்லை. மேலும் மற்றவர்களைப்போல் நானும் என் பேனாவிடம் அக்கப்போர் செய்வதாக உத்தேசமில்லை. ஆதலால் நமது கடமை என்ன?

உண்மையில் நமது எண்ணங்கள் ஈடேறவேண்டுமானால், நாம் காரியானுகூலம் பெறவேண்டுமானால், நாம் சமத்துவம், சகோதரத்வம், விடுதலை பெறவேண்டுமானால், நாம் முன்னேற்றமடையவேண்டுமானால், நாம் க்ஷேமகரத்துடன் வாழவேண்டுமானால், நாம் மூடசிகாமணிகளாயிராது ஞானசிகாமணிகளாய் வாழவேண்டுமானால் நமது ஒற்றுமையைக் குலைக்கும், நமது அந்தஸ்தைக் கெடுக்கும், நமது முன்னேற்றத்தை தடைசெய்யும், நமது அறநெறியை அடைத்து நிற்கும், நமது அறிவுச்சுடரை அணைக்கும், நமக்குள் மாச்சரியத்தை விளைவிக்கும் இக்கொடிய, நாசகரமான, ராக்ஷதனுக்கொப்பான விஷம் போன்ற "அக்கப்போரை" உடனே ஒழிக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் முன்னேறிச்செல்ல மார்க்கமுண்டு.


## ஸ்ரீ பழனியாண்டவர் தாயத்து.

அன்பர்கள் மனக்கவலைகளை நீக்கி, சரீர சௌக்கியம், ஆயுள் விர்த்தி, சந்தான பாக்கியம் உண்டாக்கும்.

தாயத்து 1-க்கு ரூ. 1—4—0.

ஸ்பெஷல் தாயத்து சார்ஜ் வேறு.

**S.V.** ராஜப்பா, மலைக்கோவில் மிராஸ், பழனி. S.I.

# * விநோத விவாஹம்! *

(தண்டனையடைந்த தம்பதிகள்.)

**மணமகன்—மரண தண்டனை அடைந்தவன்**
**மணமகள்—10-வருஷ தண்டனை அடைந்தவள்**

**வா**ர்சா நகரில் நினைத்தற்கரிய ஓர் அதிசய காதல் மணம், சென்ற மாதம் நடைபெற்றது. மரண தண்டனை அடைந்த மணமகனுக்கும், 10-வருட தண்டனை அனுபவிக்கும் மணப்பெண்ணுக்கும் சிறைக்குள் திருமணம் நடந்த ருசிகரமான விபரத்தைக் கீழே காண்க.

லெபெட் என்ற உக்ரேனிய வாலிபன் பாடசாலையில் படித்துவந்தகாலத்திலிருந்தே டேரியா ரானட்சின்ஸ்கா என்ற பெண்ணைக் காதலித்துவந்தான். போலந்துதேச மந்திரி கொலை செய்யப்பட்டதில் இவர்கள் இருவரும் சம்பந்தப்பட்டவர்களென்ற குற்றம் சாட்டப்பட்டு சென்றது லெபெட் தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்றான்.

டேரியாவுக்கு வயது 22. அழகிற்சிறந்தவள். அழகுப் போட்டியில் பல வெகுமதிகள் பெற்றவள். தன் காதலனுக்கு உதவிசெய்யவே இவள் உக்ரேனியப் புரட்சி இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்தாள். போலந்திலுள்ள 50-லட்சம் உக்ரேனியர்களின் விடுதலைக்காகப் பாடுபடுவதே அந்த இயக்கத்தின் லட்சியம். போலீசார் லெபெட்டைத் தேடும்போதெல்லாம் டேரியா அவனை ஒளித்துப்பார்த்தாள்.

மரண தண்டனை விதிக்கப்பெற்றதும், லெபெட் தான் காதலித்த பெண்ணை மணந்துகொள்ள கோர்ட்டாரை அனுமதிகேட்டான். அவன் அவளை பால்யத்திலிருந்தே நேசிப்பதாகவும், விவாஹம் செய்துகொள்வதாக வாக்களித்திருப்பதாயும், அவளிடத்தில் எக்காலத்தும் வாக்குத் தவறி நடந்ததில்லை என்றும், வாக்குத்தவறி இறக்க சம்மதமில்லை என்றும் கோர்ட்டாரிடம் தெரிவித்தான். அதுபோலவே டேரியாவும் கோர்ட்டாரை வேண்டிக்கொண்டாள். சிறிது யோசித்து அதிகாரிகளும் விவாகத்தை அனுமதித்தனர்.





திருமணம் இரகசியமாய் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. வெளியிலிருந்து ஒரு புரோகிதர்மட்டும் வரவழைக்கப்பட்டார். ஆயுதந்தாங்கிய போலீசார் மணமகனை மணமகள் அறைக்கு அழைத்துச் சென்றனர். வார்டர்கள்தான் சாட்சிகள். மணம் செய்துகொள்ள 15-நிமிடம் அனுமதித்தனர். மணமுடிந்தபின் தம்பதிகள் தனியாயிருக்க இரண்டு நிமிடம் அனுமதிக்கப்பட்டனர். லெபெட் மணமோதிரத்தை பெண்ணின் கையில் அணியும்போது மனமுடைந்து டேரியா அழுதுவிட்டனளாம். இதைப்பார்த்த வார்டர்களும் கண்ணீருகுத்தனராம். தம்பதிகள் முத்தமிட்டுப் பிரிந்தனர். டேரியாவின் கடைசி வார்த்தை இதுதான். **"மீண்டும் நாம் சந்திக்க முடிந்தால் நான் உனக்கே சொந்தம்".**

---

## தீமை வளரும்—
## கொடுமை உயரும்.

இந்தியா சட்டசபையில் சமூக முற்போக்குள்ள மக்களுக்கு நலம் பெரிதும் பயக்கும், தீண்டாதார் உரிமைத்தடைநீக்க மசோதா, ஹிந்து கலப்புமண மசோதா, பால்யவிவாஹத்தடை நீக்க மசோதா, இந்து ஸ்திரீகள் சொத்துரிமை மசோதா முதலியன பலரது பெருமுயற்சியால் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தியா வெங்குமுள்ள சகல பொதுநல சங்கங்களும் இதை ஆதரித்தும், இவைகளை எதிர்க்கும் சமூக விரோதிகளை கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றி சட்டசபைத் தலைவருக்கு அனுப்பவேண்டுகிறோம்.

இல்லையேல் பிற்கால சந்ததியாரின் பெரும்பழிக்காளாக வேண்டிவரும்.

# "சுசீலா"

## சுகந்த வாசனைத் தைலம்.

நூதன முறைப்படி தயாரிக்கப்பட்டது.

ரோமம் உதிர்தல், தலையில் பொடுகு உண்டாகுதல் முதலியவைகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமலை K.S. ராமநாத அய்யர் ஹோட்டல், பழனி.

சென்ட்ரல் லஞ்ச் ஹோம், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.



ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு வைத்திய சாலையிலும், ஒவ்வொரு புத்தக சாலையிலும் அவசியம் இருக்கவேண்டிய நூல்.

## சிகிச்சாசாரம்.

வைத்திய சம்பந்தமாயும், நோயற்று வாழும் சிறிய முறையனைத்தும் சாங்கோபாங்கமாய் எடுத்தோதும் உயரிய சாஸ்திரம். ஒவ்வொருவரும் இந்நூலை அவசியம் வாங்கியே தீரவேண்டும்.

| குறைந்த விலை | அசல் விலை |
|---|---|
| ரூ. 3—8—0. | ரூ. 5—0—0. |
| தபால் செலவில்லை. | தபால் செலவு ரூ. $1\frac{1}{4}$. |

15—7—36 வரை குறைந்த விலை திட்டத்திற்கு பணமனுப்பலாம்.

இதர விளம்பரங்களுக்கு:—

டாக்டர் எஸ். ஏ. சின்னப்பர்,

"ஆலை மரியா காட்டேஜ்",

எட்டயாபுரம். (திருநெல்வேலி ஜில்லா)


# மாதர் பகுதி.

## ஆண் பெண் தன்மை


(தோழர், A. [illegible]. ஆதித்தர்.)


### பிரபஞ்சத்தின் இ[illegible]சரி வாழ்க்கையிலே

நாம் பல அன்பர்களின் மத்தியிலேயே பழகி வருகிறோம். பிறரைச் சற்றுக் கூர்ந்து நோக்குவோமாயின் சில ஆண் பிள்ளைகளின் செயல்கள் பெண்களைப்போலவும், சில பெண்களின் செயல்கள் ஆண்களைப்போலவும் இருந்து வருகிறதைக் காணலாம். இதற்குக் காரணமென்ன?

மக்கள் புணர்ச்சிகாலத்திலே புருஷனின் சுக்கிலம் அவனுடைய வலது பாகத்தினின்றும் மனைவியின் வலது பாகத்தளவில் நடந்தால் அந்தப்பிள்ளை ஆண்மை பூரணமான ஆண்பிள்ளையாகவும், அவனுடைய இடது பாகத்தில் நின்றும் அவளுடைய இடதுபாகத்தளவில் நடந்தால் அந்தப்பிள்ளை பெண்தன்மை பூரணமான பெண்பிள்ளையாகவும், அவனுடைய வலதுபாகத்தில் நின்றும், அவளுடைய இடதுபாகத்தளவில் நடந்தால் அந்தப்பிள்ளை பெண்தன்மையுடைய ஆண்பிள்ளையாகவும், அவனுடைய இடது பாகத்தில் நின்றும் அவளது வலதுபாகத்தில் நடந்தால் அந்தப்பிள்ளை ஆண்தன்மையுடைய பெண்பிள்ளையாகவும் கர்ப்பம் தரிக்குமென்று ஒருசாரார் கூறுகின்றனர்.

(வலது நாசி, இடது நாசிகளில் சுவாசம் ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தையே வலதுபாகம், இடதுபாகம் என்று கூறப்பட்டிருக்கிறது. இடதுபக்கம் சாய்ந்துகொள்வதால் வலதுநாசியிலும், வலதுபக்கம் சாய்ந்துகொள்வதால் இடது நாசியிலும் சுவாசமானது ஓடிக்கொண்டிருக்கும்.)

மக்கள் புணர்ச்சிகாலத்திலே புருஷனின் சுக்கிலம் அவளுடைய வலதுபாகத்தில் நின்று பரிணமிப்பின் வலதுபாகத்தினில் நடந்தால் அந்தப்பிள்ளை ஆண்பிள்ளையாகவும், அவளுடைய இடது பாகத்தில் நின்றும் அவ்வாறு இடது பாகங்களில் நடந்தால் அந்தப்பிள்ளை பெண்பிள்ளையாகவும் கர்ப்பந்தரிக்கும் என்றும், அவ்வாறு தரிக்கும் பிள்ளைகளிடத்தில் ஆண் தன்மையோ பெண் தன்மையோ அதிகப்பட்டிருப்பது தாய் தந்தையர் இருவரிடத்திலுமிருந்து மிஞ்சியுள்ள சக்தியென்றும், மனைவிக்கும் புருஷனுக்கும் சுவாசம் ஒரே பாகத்தில் ஒத்திராமல் இருவருக்கும் வெவ்வேறு நாசிகளில் மாறுபாடாக நடிக்கொண்டிருந்தால் கர்ப்பமேதரிக்காதென்றும், ஒருக்கால் தரித்தால் அது அலியாகுமென்றும் மற்றோர் சாரார் கூறுகின்றனர்.

உண்மை எதுவோ அறியோம்; எனினும் ஆண் பெண் வர்க்கத்தில் ஆண்மை கொண்டுள்ள பெண்கள் சிலரும், பெண்மை கொண்டுள்ள ஆண்கள் சிலரும் இருந்துவருவது நாம் தெரிந்தவிஷயமேயாகும்.

இந்த நிலைமையில் இளம்வாலிபர்கள் பெண்களைத்தான் மோகிப்பார்களென்பதில்லை. ஓர் ஆண் மற்றொரு ஆணையே மோகிக்கக்கூடும். ஏதனாலெனில் ஒரே ஆளிடமே சில சமயம் ஆண்மை பிரதிபலிப்பதும், சில சமயம் பெண்மை பிரதிபலிப்பதும் உண்டு. பூரண பெண் தன்மையே பூண்டு உள்ள ஆண்களும், பூரண ஆண் தன்மையே பூண்டுள்ள ஆண்களும் நம்மில் இருக்கிறார்கள். பூரண ஆண் தன்மை உள்ள ஒரு ஆடவனவன் பூரண பெண் தன்மையுள்ள ஒரு பெண்ணைப் பிரியமுடன் நேசிப்பதுபோல் பூரண பெண் தன்மையுள்ள ஒரு ஆணையும் நேசித்துவிடுவான். இது போலவே பூரண பெண் தன்மையுள்ள ஒரு புருஷன் பூரண ஆண் தன்மையுள்ள ஒரு பெண்ணையோ, பூரண ஆண் தன்மையுள்ள ஆணையோ நேசிப்பான். இவ்வாறே பெண் தன்மையுள்ள பெண்களுக்கு ஆண் தன்மையுள்ள ஸ்திரீ புருஷர்களிடத்தும் ஆண் தன்மையுள்ள பெண்களுக்கு பெண் தன்மையுள்ள ஸ்திரீ புருஷர்களிடத்தும் ஆசை அதிகம். மக்களிடத்தே கலந்துவாழும்பொழுது இதனை நுட்பமாகக்கவனிப்பின் உணரலாம். இவ்வாறு ஆண் தன்மை-



யும், பெண் தன்மையும் இருபாலரிடத்தும் நிரந்து காணப்படுவதால் ஆண் ஆணையும், பெண் பெண்ணையும் ஆரம்ப வாலிப காலங்களில் மோகிக்கவும் நேரிடுகிறது.

பிள்ளைப்பேறு என்ற ஒரு ஆசைக்காகவே ஒரு பெண் ஒரு ஆணையும், ஒரு ஆண் ஒரு பெண்ணையும் மணக்க வேண்டியதிருக்கிறதே அல்லாமல் வேறு காரணம் இருப்பதாகத்தெரியவில்லை. ஏனெனில் பெண்களுக்குள்ளும், ஆண்களுக்குள்ளும் அவரவர் இனத்திலேயே மோகித்துக் கொள்ளக்கூடிய தன்மை வாய்ந்தவர்கள் இயல்பாகவே இருந்துவருகிறார்கள். அவர்கள் தங்கள் அகத்திலெழும் இன்ப உணர்ச்சியை மிகச்சந்தோஷமாய் நிறைவேற்றிக் கொள்ளக்கூடும். இதனாலேயே "ஸ்திரீயைப் பார்ப்பதும், அவள் தொனியை ஆசையுடன் கேட்பதும், அவர்களுடன் தனித்திருப்பதும், இரண்டு ஆடவர் அல்லது இரண்டு ஸ்திரீகள் ஒரு படுக்கையில் உறங்குதலும், ஒரு ஆடையிற்படுத்தலும் கூடாது" என்று "மிபுத்தாஹுஸ் ஸலாஹ் ட். மிலாஹின்னிக்காஹ" என்னும் நூல் கூறுகின்றது. "பெற்றோர்கள் பத்துவயதாய்விட்ட சிறுவர்களை சகோதர சகோதரிகளோடு படுக்கவொட்டாமல் பிரித்தல் நல்லது" என்று அந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண் பெண் தன்மைக்கும், அதையடுத்த காம உணர்ச்சிக்கும், பிரபஞ்ச அநுபவத்துக்கும் இது ஒத்துள்ள கட்டளையாதலால் மக்கள் சிறுவர் சிறுமிகளைத் தனித்திருக்கும்படி செய்வதுகூடாது.

---

நீங்கள் இதைப்படித்ததுண்டா?
மனச்சாந்தியும், அன்பும், ஒழுக்கமும் அடைய விரும்பும்
ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம்
மார்க்க அரேலியர்
ஆத்மசிந்தனை.
பிரதி 1-க்கு விலை அணா 8.
கிடைக்குமிடம்:-
மானேஜர், சித்தன் காரியாலயம், பழனி S. I.

# எதிரொலி.

(கோயில்பூனை)

## காதல் தோட்டம்.

லோவல் என்ற நகரத்தின் தோட்ட கமிஷனர் கீழ்க்கண்ட விளம்பரத்தைச் செய்துள்ளனராம்:—

"போர்ட் ஹில்பார்க் என்ற தோட்டத்தில் போலீசார் காவல்புரியமாட்டார்கள், விளக்கும் வைக்கப்படமாட்டாது. அத்தோட்டம் பொது ஜனங்களின் தோட்டம். பொது ஜனங்கள் அதனை மனம்போல் உபயோகித்துக்கொள்ளலாம்"

—பத்திரிகை செய்தி

---

## ரஷ்யாவில் ஸ்டுடியோ.

"சோவியத் பிலிம் டிரஸ்ட்" என்ற பெயருடன் ரஷ்யர்கள் ஒரு பெரிய பிலிம் கம்பெனி ஏற்படுத்தப் போகிறார்களாம்.

இக்கம்பெனியில் இயந்திர வகைகளுக்காக 1200,000 பவுன்கள் செலவிடப்படுமாம். 40 ஷூட்டிங் செய்யப்படும் மேடைகளும்-ஒரு டைரக்டருக்கு உதவிக்கு 2 பேர்கள் வீதம் நிரந்தரமாக 100 டைரக்டர்களும், 100 உதவி டைரக்டர்களும், 72 முக்கிய காமிராமென்களும், 96 இதர காமிராமென்களும், 55 பிலிம் எடிட்டர்களும், 40 கலை டைரக்டர்களும், 10 கலர் காமிராக்களும் கொண்டதாக இருக்குமாம். இதில் 500 நடிகர்கள் கலந்துகொள்வார்களாம்.

—செய்தி

இதை அப்படியே நமது நாட்டுப் படமுதலாளிகளுக்கு சமர்ப்பிக்கிறோம். 50, 60 ஆயிரம் ரூபாய் சேர்த்ததும் சில ஆக்டர்களைப் பிடித்துக்கொண்டு ஒரு கம்பெனி பெயரை வைத்துக்கொண்டு, பல ஊர்களிலும் பலர் கிளம்பி, பல ஆபாசமான படங்களை பெருவாரியான தொகையைச் செல





விட்டு பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களுக்குச்சென்று காசைக் கொட்டிக்கொடுத்து, தாங்களும் லாபமடையாமல், பிறரை லாபமடையவிடாமலும் நடந்துவருவது பரிதபிக்கத்தக்கதே. பல முதலாளிகள் சேர்ந்து ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாக ஒரு ஸ்டுடியோவை ஏற்படுத்தி தாங்கள் கதைகள் தயாரிப்பதோடல்லாமல், கதை எடுப்போரிடமும் ஊதியமும் பெறலாம். இவ்வளவுக்கும் நமது நாட்டுக்கு ஒரு சில லட்சம் ரூபாய்கள் போதுமானது. சினிமாகலை நூதன முறையில் வளரும்; பலர் அதனால் பயன் பெறுவர். பொதுமக்களுக்கு அதனால் அனுகூலமும் லாபமும்கூட உண்டு. யாராவது துணிகிறார்களா பார்ப்போம்.

---

## பாம்புகளைக் கடிக்கவிட்டு, மனைவியைக் கொன்ற பாதகன்.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரக்கோர்ட்டில் ஒரு விசித்திர கேஸ் நடைபெற்றது. அதில் வாதி ராபர்ட் ஜேம்ஸ் என்ற அம்பட்டன் மேரி எம்மா ஜேம்ஸ் என்ற தன் மனைவியை இரு பாம்புகளைவிட்டுக் கடிக்கவிட்டதாகவும், அவள் மூர்ச்சையானதும் நீரில் முக்கி அமுக்கிக்கொன்றதாகவும் தாவா. அவனுக்கு இவள் 5-ம் மனைவியாம். முந்திய மனைவிகளையும் இதே மாதிரி கொடுமைப்படுத்திக் கொன்றதாகவும், சம்மட்டியால் அடித்துக்கொன்றதாயும், மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிக் கொன்றதாகவும் சாட்சிகள் கூறினராம்.

—பத்திரிகை செய்தி

வன்னெஞ்சனை இப்பாதகனது நடத்தையை என்னென்பது? இவனுக்கு மரணவேதனையை அனுபவிக்கும் தண்டனையே சாலச்சிறந்தது.

---

## சீர்திருத்த கலப்பு மணம்.

சென்ற மாதம் 12-உ சென்னையில் மிகவும் விசேஷித்த ஒரு சீர்திருத்த கலப்பு மணம் நடைபெற்றது. மணமகன் கொத்தமங்கலம் பாங்கர், திரு என். ஏ. என். அண்ணாமலை செட்டியார். மணமகள், பிரபல சங்கீத வித்வபூஷணியும், நடன மாதுமான ஸ்ரீமதி ராதாபாய் அம்மாள்.

—பத்திரிகை செய்தி

மகிழ்ச்சிக்குரிய இச்செய்தியை சந்தோஷத்துடன் வரவேற்கிறோம். இத்தகைய கலப்பு மணங்கள் ஒன்றிரண்டல்ல, நூற்றுக்கணக்கில், இல்லை ஆயிரக்கணக்கில் நடைபெறுமானால் சமூக இன்னல்களும், உயர்வு தாழ்வுக் கொடுமைகளும், ஜாதி சமயப் பூசல்களும் காற்றெனப் பறக்கும். நாட்டிற்கும், மக்களுக்கும் க்ஷேமம் பெருகும். அந்நாள் எந்நாள்?

---

## விற்பனைக்குக் குழந்தை!

வியன்னா நகரத்திலுள்ள ஒரு பிரபல தினசரிப் பத்திரிகையில் பின்கண்ட விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதாம்:—

**“என்னுடைய மனைவி கர்ப்பவதியாய் இருக்கிறாள்; இன்னும் இரண்டு மாதங்களில் குழந்தை பெற்றெடுப்பாள்; குழந்தை மிகவும் அழகாயிருக்கும்; 2000-பவுன் கொடுக்கும் பெற்றோர்க்கு, அக்குழந்தையை நான் விற்கத் தயாராயிருக்கிறேன்; வேண்டுவோர் முந்திக்கொள்க”.**

நாகரீகநாட்டில் இத்தகையவிளம்பரம் நூதனமானதே! குழந்தை அழகாயிருக்கும், விற்பனைக்கு என்று விளம்பரம் செய்யும் பெற்றோர், பணக்கஷ்டத்தினாலோ அல்லது குழந்தை வேண்டாமென்ற காரணத்தினால் விற்கத் துணிந்தாரோ; நமக்கு விளங்கவில்லை. ஆனால் குழந்தை பிறக்குமுன் “அழகாயிருக்கும்” என்று ஜோசியம் சொல்லும் மனோவன்மையை வரவேற்கிறோம். இதுபோல தங்களுக்கு வேண்டிய குழந்தையை, அதாவது ஆண் வேண்டுமானால் ஆண், பெண் வேண்டுமானால் பெண் பெற்றெடுக்கும் சக்தியும், முறையும், மனோவலிமையும் சிலர் பெற்றிருக்கிறார்கள். அந்த ரகத்தை இவர் சேர்ந்தவர் என்பதற்கு மட்டும் இவரைப் போற்றுகிறோம்.

---

சீனா தேசத்தில் ஷாங்கே நகரில் பூனைகளுக்கென்று தனி ஹோட்டல் ஏற்பட்டுள்ளது. சுமார் 3000 பூனைகளுக்கு காலை, மத்தியானச் சாப்பாடு கொடுக்கப்படுகிறது. ஹோட்டல்காரர்கள் பூனைகள் இருக்கும் வீடுகளுக்கு ஆகாரத்தை கொண்டுபோய் கொடுத்துவருகிறார்கள்.

—பத்திரிகைச் செய்தி.



வாயில்லாப் பூச்சிகளாய் வேலை செய்தும் கூலி இல்லாமலும், நெற்றி வியர்வை நிலத்தில்விழ பாடுபட்டு உழைத்தும் போதிய வருவாய் இல்லாமல், ஒரு வேளை கூழுக்கும் வழியில்லாமல் ஆண், பெண் குழந்தைகள் அனைத்தும் நித்திய தரித்திரர்களாய் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், முதலாளிகள் கொடுமையாலும், பண நெருக்கடியாலும ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நம் நாட்டில் மிருகங்களைவிட கேவலமான நிலையிலிருந்து மடிகின்றனவே கேட்பாரில்லையா?

---

ஷெப்பீல்டில் ஜோசப் பாமர் என்ற எண்பது வயதுக் கிழவர் இன்னும் டான்ஸ் ஆடுகிறாராம். சார்லஸ் கிங் என்பவர் தனது 85வயதில் இங்கிலீஷ் கால்வாயை தினசரி நீந்துவாராம். மாடம் சாக்லி என்ற பிரஞ்ச் சர்க்கஸ் மாது தனது 79-வது வயதில் கம்பிமீது நடக்கும் வித்தையைச் செய்தாராம். டான்பீரோ அடுவோ என்பவர் 80-வது வயதில் சர்வகலாசாலையில் படிக்க பி. ஏ. வகுப்பில் சேர்ந்தாராம். தனது 81-வது வயதில் மார்கரட்டோரி என்ற மாது தனது நண்பர்களைக் காண்பதற்காக ஆயிரக்கணக்கான மைல்கள் விமானத்தில் பறந்துசென்றாராம். ஸ்ரீமதி விட்டேகர் என்ற மாது தனது 99-வது வயதில் சைக்கிளில் சவாரி செய்தாராம்.

—பத்திரிகைச் செய்தி.

## என் நமது நாட்டில் அத்தகையார் இல்லையா என்ன?

மழையை வருவிக்க யாகம் செய்பவர்கள் இருக்கிறார்கள்; பகவத்கீதை, ராமாயணம், பாராயணம் செய்பவர்கள் இருக்கிறார்கள்; சாமர்த்தியமாய் சொக்கட்டான் ஆடுபவர்கள் இருக்கிறார்கள்; மிகவும் மெல்லிய நூல் நூற்பவர்கள் இருக்கிறார்கள்; இளஞ்சிறுமிகளுக்கு அம்மானை, ஒப்பாரி முதலியன சொல்லிக்கொடுப்பவர்கள் இருக்கிறார்கள்; பேய் ஓட்டுபவர்கள் இருக்கிறார்கள்; பாலிய மணம் இருக்கவேண்டும், தாசித் தொழில் போகக்கூடாது என்று சொல்பவர்களும் இருக்கிறார்களல்லவா!

தென் இந்தியா
மோட்டார் பாடசாலை.
(1916ஞ ஸ்தாபிக்கப்பட்டது)
3மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக்கோள்ளலாம்.

மோட்டார் வண்டிகளை ஓட்டவும், மெஷின்களைக் கழற்றவும், பூட்டவும், எலக்டிரிக் வேலைகளையும், மலைப்பிரதேசங்களில் கார்களை ஓட்டவும், வேறு பல சீர்திருத்தங்களை செய்யவும், கற்றுக்கொடுத்து தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்டு லைசன்சும், பாடசாலை சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும். வாசிப்பு இல்லாதவர்களுக்கும் சுலபமாய் கற்றுக்கொடுக்கப்படும்.

தேர்ச்சிபெற்றால் ரூ. 35 முதல் ரூ. 100 வரையிலும் பெறலாம். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2.

தபால் செலவு வேறு. விபரத்துக்கு எழுதவும்.
தென் இந்தியா மோட்டார் எஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்
& பாடசாலை, மயிலாப்பூர் PO. சென்னை.

கீழ்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்:—
மானேஜர், "சித்தன்" காரியாலயம், பழனி.

ஞானமுள்ள பெற்றோர்
தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி
சிறுவர் அறிவுக்கதிர்.
இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப்பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித்துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக்கொண்டது. மாதிரிக்காப்பிக்கு ஐந்து காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா உள்நாடு 12 அணா. வெளிநாடு 1—4—0.
டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:— சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு. (தென்னிந்தியா.)

அகத்தியர்

# குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்.)

(344-ம்பக்கத் தொடர்ச்சி.)

அணியவரும் இரத்தந்தான் மூளையிற் சேர்ந்து
அப்பனே காணுகின்ற தலைநோயிற்றான்
குணிதமுடன் வேதனைகள் முக்கியமாய் நெற்றி
கொப்பெனவே பிடரி இவை களிலே தோன்றும்
துணிந்துவரும் திரேகத்தில் இரத்தம் விம்மி
துரிதமுடன் முகமுதலாய்க் கண்சி வந்து
அணியான நாடிதான் பருத்துக் காட்டும்
அப்பனே முகக்களையுஞ் சோர்ந்து போமே. (189)

போமேதான் இதற்குவளம் மருந்து கேளாய்
பொங்கமுடன் கன்னத்தின் பொரியதனில் தான்
ஆமேதான் இரத்தத்தை யெடுத்தால் நன்மை
அப்பனே அடிக்கடிதான் பேதிக் கீய்ந்து
சாமேதான் கடும்பத்தியம் தன்னி லப்பா
சதிரான திரேகத்தில் இரத்தம் மிஞ்சில்
ஆமேதான் இந்தநோய் போகு மென்று
உறுதியாய்ச் சொல்லுகிறேன் உண்மை பாரே. (190)

பாரேநீ அக்கினிமந் தத்தி னாலே
பரிவுடனே காணுகிற தலைநோய் தானும்
கூரான வலதுகண் மேலே யேனும்
குறிப்பாக இடதுபுறம் கன்னப்பொறியி லேனும்

கோரக நெத்தியின் மேலே யேனும்
நெறியுடனே வேதனைகள் காட்டும்பாரு
கூறுகிறேன் நோயாளி காலையில் தான்
குறிப்பாக எழுந்துவரும் போது காணே. (191)

காணுகின்ற நோயதுதான் அற்ப மாகில்
கதிப்புடனே போசனந்தான் செய்தால் தீரும்
பேணிவரும் வியாதிதான் பெலமே யானால்
பெலமாக ஓரிடத்தில் வேதனையே தங்கும்
தோணியே குமட்டலுடன் வாந்தி கண்டு
கொதிப்பாக புத்திமா றாட்டங்காணும்
காணுகின்ற பார்வைதான் மந்த மாகிக்
காதுதனில் இரைச்சலுடன் வேதனையு முண்டே
(192)

உண்டான பித்தநீர் வாந்தி யானால்
உத்தமனே தலைநோய்தா னுடனே நிற்கும்
செண்டான வயிற்றில் வாய்வு கொண்டு
செயலாக உபத்திரவத்தை உண்டு பண்ணி
பண்டான இந்தநோய்தான் மந்தத் தாலும்
பரிவாக அடிக்கடி பேதிக்கீய்ந் தாலும்
கண்டிதமாய் உண்டாகு மென்று நீதான்
கருத்துடனே சொல்லுவாய் கண்டுகொள்ளே. (193)

கண்டுகொள்ளு மூளையுட வியாதி யாலே
கதிப்பாகக் காணுகிற தலைநோய்க் கேதான்
உண்டான குறியதனைச் சொல்வேன் கேளாய்
உத்தமனே வேதனைதான் தலைக்குள் நோவும்
சண்டையுடன் சிந்தனையும் சிரத்தை மெத்த
சதிராக அசைப்பதினால் நோயதிக மாகும்
துண்டாக வியாதியால் சிலபேருக் கப்பா
அடிப்புடனே இசிவுசன்னி பாரிசவாதங் காணுந்
தானே. (194)



தானான சுரம் சயம் காதுநோ யாலும்
தருவான பல்வலிகள் ஈர்நோ யாலும்
ஊனான சூதகத்தின் அதிகத் தாலும்
உத்தமனே உஷ்ணமுதல் வாய்வி னாலும்
மானான கவலையின் யேக்கத் தாலும்
மகத்தான குன்மநோய் வருவ தாலும்
தேனான இந்தநோய்தான் வருகு மென்று
தெளிந்துநீ யதையறிந்து சொல்லுசொல்லே. (195)

சொல்லுகிறேன் அதற்குவகை மருந்து கேளாய்
சுயமான மூளையில்தான் ரத்தம் பொங்கி
அல்லல்செய்து காணுகின்ற தலைநோய்க் கப்பா
அப்பனே அட்டையிட்டு ரத்தம் வாங்கி
வல்வினைகள் தீருதற்குப் பேதிக் கீய்ந்து
வகையான துர்நீரை வெளியே போக்கி
தொல்வினைகள் தீருதற்குப் பத்தியம் வைத்து
சுயமான வீரத்தின் மெழுகீ வாயே (196)

சுயமான தலைவலிக்குக் காரணங்கள் மெத்தச்
சொல்லுகிறேன் அதினுடைய விபரங் கேளு
சயரோகம் சுரரோகம் வந்த போது
சதுரான காதுவலி பல்லின் ரோகம்
மயமான இந்தநோய் வருகும் போது
மகத்தான தலைநோய்கள் வந்து சேரும்
பயமான முதல்ரோகம் நிவர்த்தி யானால்
பண்பான தலைநோய்தான் தீரும் பாரே. (197)

பாரேநீ சூதகத்தால் தலைநோய் கண்டால்
பண்பான அயங்கொடுத்தால் தீரு மப்பா
கூரான காதுநோய் தலைநோய்க் கப்பா
கொப்பெனவே கைகளைத்தான் தலைமேல் வைப்பாய்

சீராக நோயதுதான் தீருமென்று
சிறப்பாக இன்னுமொரு மருந்து கேளு
நேரான குளிர்ந்தநீர் பாலேயேனும்
நிசமாகத் தலையிலிட்டால் தீருந் தானே (198)

தானான இன்னமொரு மருந்து கேளு
தயவான சுக்குடனே திப்பிலியுங் கூட
மானான மஞ்சளுடன் சதகுப்பை மிளகு
மகத்தான கற்பூர மொன்றாய்ச் சேர்த்து
தேனான ஒருநிறையாய்ச் சேர்த்துக் கொண்டு
தெளிவான குன்றிமணி இலைச்சார் விட்டு
ஊனாக மைபோல அரைத்து மப்பா
உறுதியுள்ள கருந்துணியில் தடவிப் போடே. (199)

போடேநீ உருட்டியதைத் திரியாய்ப் பண்ணிப்
பொங்கமுடன் கொளுத்தியதின் புகையை வாங்கே
கூடோடே தலைவலிதான் விட்டுப் போகும்
குறிப்பாக இன்னுமொரு மருந்து கேளு
அடேநீ அபின்சுக்கு சாம்பிராணி
அடைவான கஸ்தூரி மஞ்சள் கூட
நாடேநீ யிதையரைத்துப் பத்துப் போட்டால்
நலமான தலைவலிதான் நாடா தோடும் (200)

ஓடிவிட அதற்குச் சந்தனதி செய்து
உறுதியாய் அடுத்தடுத்து மூழ்கி வந்தால்
நாடாமற் போய்விடும் பகரும் நோய் தான்
நலமான வேதுகளால் போகுமப்பா
தேடிவா மாவிலிங்கப் பட்டையைத் தான்
திறமாக இடித்துவொத் தனமே போட்டால்
ஓடிவிடும் தலைநோய்கள் உடனே மைந்தா
ஒருநொடியில் தீர்ந்துவிடும் உண்மை பாரே. (201)

(தொடரும்)

# வைத்தியப் பகுதி.

## வயிற்றுக்கடுப்பு.

இவ்வியாதியைப்பற்றிக் கேட்டிராதவர்கள் ஒருவரும் இரார். ஆனால் இது எவ்வாறு உண்டாகிறதென்பதை அறிந்திருக்கமாட்டார்கள். இது அநேகருக்கு அடிக்கடி உண்டாகிறது. இது சாதாரணமாய் சரீரத்தில் அதிக உஷ்ணம் தாக்குவதாலும், மிதமீறிய உஷ்ணம் காரணமாக பெருங்குடலின் உட்புறத்தில் இருக்கிற சவ்வு ரணமாகியும் உண்டாகிறது. இவ்வியாதியை சீதக்கடுப்பு, சீதரத்தக்கழிச்சல், சீதபேதி, வயிர்கொட்டல் என்றும் சொல்வதுண்டு. மேலே சொல்லப்பட்டபடி பெருங்குடலிலிருக்கிற ரணம் சிறு குடலுக்கு சில சமயங்களில் பரவுவதும் உண்டு. இதனால் உடல் தளர்ச்சியுறும். சிலருக்கு ஜுரம் உண்டாகும். வியாதி அதிகமாகிவிட்டால் வசப்படுத்த இயலாது. ஆதலால் ஆரம்பத்திலேயே கவனிக்கவேண்டும். நாட்பட விட்டுவிடுவதால் இதுவே கிராணியாக மாறுவதுமுண்டு. பின்பு மிகவும் துர்லபமாய் முடியும்.

### வியாதியின் குணம்.

மேற்கூறிய வியாதியுள்ளவர்களுக்கு வயிற்றில் குடலை முறுக்குவதுபோல் வலியுண்டாகும். அடிக்கடி மலபாதைக்குப்போகும்படியான தன்மையும் போனபின்பு வேதனை குறைவதாகவும் காணும். மலத்தோடு சீதமும், சில வேளைகளில் இரத்தமும் கலந்து போகும். அதுவும் முக்கலோடு போகும். இச்சமயத்தில் கடுப்புத்தோன்றும். மலம் கொஞ்சங்கொஞ்சமாய் இறங்கும்; சிலருக்கு தீஞ்சிருக்கும். வயிற்றையமுக்கினால் வேதனை உண்டாகும்; பசி இராது. ஆனால் தாகமிருக்கும்; நாடி தீவிரமாய்ப் போவதுபோல் தோன்றும்.

### வியாதியின் காரணம்.

சரீரத்தில் சூடு தாக்குவதால் கொதிப்பேறி பெருங்குடலிலுள்ள சவ்வு ரணமாகியும், அளவு மீறி உண்டான

உஷ்ணத்தாலும் காணுகிறதென்று மேலே கூறினேம், தவிர ஈரம், குளிர்ச்சி, விஷக்காற்று, மலபந்தம், வேகமான பேதி இவைகளாலும் இவ்வியாதி உண்டாகிறது. ஆதலால் கண்டகண்ட மருந்துகளை விரேசனத்திற்கு உபயோகிக்காமல் உப்புவகை, ஆமணக்கெண்ணெய் முதலிய அதிக சூட்டை விளைவிக்காத மருந்துகளை உட்கொள்வதால் நன்மை பயக்கும். விஷஜுரம் வியாபிக்கிற இடங்களிலெல்லாம் இவ்வியாதியும் பரவும்.

## சிகிச்சை.

பெருங்குடலில் கண்டிருக்கிற கொதிப்பு தணியும்படி வெந்நீர் ஒற்றிடம் வயிற்றின்மேல் போடவேண்டியது. ஈரத் துணியை வயிற்றின் மேல் போட்டுக் கட்டலாம்.

துவர்ப்பு விரேசன மருந்துகளைக் கொடுத்து துர்மலாதிகளை வெளிப்படுத்திவிடவேண்டியது. காரமில்லாத கஞ்சி பானங்கள், பால், முட்டை, மாமிசரசம், திராக்ஷாரிஷ்டம் முதலியன கொடுக்கலாம். துர்ப்பலமிருந்தால் பலகாரி மருந்துகளையும், போஷணை தரும் ஆகாரங்களையும் கொடுத்து தேகபலம் வரும்படி செய்யவேண்டியது.

மலமானது ஆட்டுப்புழுக்கைபோல் கட்டி இறங்கினால் ஆமணக்கெண்ணெயாவது கடுக்காய்த்தூள் கஷாயமாவது கொடுத்து வெளிப்படுத்திவிட்டு பிறகு சி. எம். சாமி, முத்து பஸ்பம், பவள பஸ்பம் கொடுப்பது நல்லது. இதைப்போல் வேறொன்றும் குணம் செய்வதில்லை. கசகசா லேகியம் கொடுக்கலாம்.

## மருந்து.

வெள்ளைக் கொய்யாவேர்ப் பட்டை, அத்திப் பட்டை, மாதுளம்பழத்தோல், மாங்காய்ப் பருப்பு, சுண்டக்காய் வற்றல் ஆகிய இவைகளைச் சமனெடை எடுத்து, ஒன்றாயிடித்து திரிகடிகைப் பிரமாணம் வெண்ணெயில் குழைத்து காலை, மத்தியானம், மாலை கொடுத்துவரலாம்.

வியாதி பிரபலமாகி மேற்சொன்ன சிகிச்சைகளுக்கு உட்படாமலிருப்பின் பழனி, மலையப்பசாமி வைத்தியசாலைக்கு எழுதுங்கள். கபாட மாத்திரை கொடுக்கலாம்.

[N. B.) மருந்து செய்பகுதியில் இவ்விதழில் கபாட மாத்திரை செய்யும் விதம் கூறப்பட்டிருக்கிறது.

# மருந்து செய்பகுதி.

## வயிற்றுக்கடுப்புக்கு
## கபாட குளிகை.

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், வாய்விளங்கம், அதிவிடயம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, ஜாதிலிங்கம், வெப்பாலையரிசி, வேப்பம்பிசின், நிலைப்பனைக்கிழங்கு, நீர்முள்ளி விதை இவைகளை சமனெடை எடுத்து, ஆலம்பட்டைச்சாறு விட்டு நான்கு சாமமரைத்து குன்றிமணி எடையளவாகக் குளிகை செய்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:— வேளைக்கு ஒரு குளிகை வீதம் காலை மாலையாக நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை சாப்பிடவும்.

## படர் தாமரை, சிரங்குக்கு
## மேற்பூச்சு மருந்து.

ரசகற்பூரம் விராகனிடை 1, மிருதார்சிங் விராகனிடை 1, பூவரசங்காய் 2 இவைகளை ஒன்றாய்ச் சேர்த்தரைத்து வெண்ணெயில் குழைத்து வியாதியுள்ள பாகத்தில் தேய்த்து மூன்றுமணி நேரம் பொறுத்து சுட்ட இலுப்பைப் பிண்ணாக்கை அரைத்துத் தேய்த்துக் கழுவவும்.

## நகச்சுத்திக்கு மருந்து.

பிரண்டையும் மஞ்சளையும் அரைத்து கட்டினால் உடையும். அதன்பின் பசுவின் நெய்யைத் துணியில் நனைத்து உடைந்த புண்ணில் போடவும்.

## வயர் எரிவுக்குக் கஷாயம்.

வில்வவேர், சித்தாமுட்டிவேர், கொத்தமல்லி விரை, வகைக்கு விராகனிடை இரண்டு எடுத்து மட்பாண்டத்திலிட்டு அதனுடன் வீசம்படி பாசிப்பயறு சேர்த்து ஒருபடி தண்ணீர் விட்டு, கால்படியாகச் சுண்டவைத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

அளவு:— வீசம்படியாக நாளொன்றுக்கு இரண்டு வேளை வீதம் காலை மாலையாக உட்கொள்ளவும்.

உபயோகம்:— வாந்தி, விக்கல், அரோசிகம், வயிறு எரிவு, வயிற்று வலி முதலியன குணமாகும்.

# வேதவியாசர் முதற்காண்டம்.

(348-ம் பக்கத்தொடர்ச்சி)

## கர்ப்ப நோய்க்கு.

பண்ணுவாய் கேளப்பா வழிகேளப்பா
பற்றறுக்குடல் வாதமொழியக் கேளாய்
விண்ணான நேர்வாளம் பலம்தோறும்
மேதினியில் புளியப்பிக் களைத்துவாங்கி
கண்ணான வாளத்தினோடு போக்கி
கனமாக வெரியிட்டுக் கொதிக்கச்சுத்தி
சண்ணுமடா கஞ்சுதள்ளி வாளந்தன்னை
சார்வான சாதிலிங்கம் கழஞ்சு மூன்றே. 3

மூன்றாக ஆமணக்கின் விரை பருப்பு
முறையான திரிகடுகு காயந்தானும்
நன்றாக வகையொன்று கழஞ்சு இரண்டு
நலமான ஆமணக்கின்றாயில் தாட்டி
ஒன்றாக குழம்பதுபோல் விழித்து வாங்கி
உத்தமனே கொம்பான சிமிழில்வைத்து
சென்றாடு பனை வெல்லந் தன்னிலப்பா
சிறப்பாகப் பயரளவு கொடுத்திடாயே. 4

கொடுத்திடவே வயிறுடைந்து பேதியாகும்
குலையிழந்த மலடவள் கிருமி சேதம்
கடுக்கின்ற குடல்வாதம் படுவன்பன்றிக்
காணவே வயிறுடையு மிரைச்சல் மந்தம்
படுத்திடுமே நெஞ்சேரிவு கிராணி வாயு
பழயமல மற்று தடாபகரமல் போற்
தொடுத்தட்டி லவணமிட்டுக் கஞ்சிகொள்ளு
தொலையாத பேதிநிற்கும் வகையைக் கேளே. 5



(தொடரும்)

# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(353-ம் பக்கத்தொடர்ச்சி.)

18932

சத்தியகீர்த்தி:- சேவகா! [illegible] காப்பான் சூரனை வரவழை.

சேவகன்:- சூரன்; சூரன்; சூரன்.

(சூரன் பிரவேசம்)

சத்தியகீர்த்தி:- அடா சூரா! கேட்பனவற்றிற்கு உண்மையுரைப்பதாய்ப் பிரமாணம் செ[illegible]

சூரன்:- எஜமான்களே! எங்கள் [illegible] சத்தியமே சொல்வேன்.

சத்தியகீர்த்தி:- என்னடா? உன் பாராவைக் கடந்து வேறுவழி யாவரேனும் உத்தியானம் புக முடியுமா?

சூரன்:- எஜமான்களே! சுத்தாலைச்சுவர் தலைக்குமேல் இருப்பதால் ஒருவரும் உள்ளே வரமுடியாது.

சத்தியகீர்த்தி:- உள்ளே ஒருவர் வரவேண்டுமானால் எப்படி வரலாம்?

சூரன்:- மகாராஜா வரகுண பாண்டியர் உத்திரவு கிடைச்சா வரலாம்.

சத்தியகீர்த்தி:- அவர் யாருக்கடா உத்திரவு தருவார்?

சூரன்:- உயர்ந்த குலத்துத் தாய்மார்கள் இதைப்பார்க்கணும்னா உத்திரவு தருவாங்கோ.

சத்தியகீர்த்தி:- ஏனடா சேனாதிபதியார் இன்று உத்தியானம் வந்தாரே? அதெப்படியடா வந்தார்?

சூரன்:- வரகுணபாண்டியர் அவரை உள்ளே விடவும், வெளியே விடவும் எனக்குக் கட்டளை கொடுத்தாங்கள். நான் சேனாதிபதியாரை உள்ளே விட்டேன்.

சத்தியகீர்த்தி:- அவர் உத்திரவு கொடுக்கக் காரணம் என்னடா?

சூரன்:- இன்று நாலைந்து நாழிகைப்பொழுது அஸ்தமிக்க இருக்கும். மகாராஜா வரகுணபாண்டியர் தலைவாயிலில்வந்து நின்றாங்க. அப்போது சேனாதிபதி வெளியே நின்றுகிட்டு உத்தியானவனத்தை பார்த்துக்கிட்டு இருந்தாங்க. வரகுணபாண்டியர் அவரைப்பார்த்து என்ன பார்க்கிறீங்க என்று கேட்டாங்க. அவர் ஏதோ இந்த உத்தியானவனப் பூவைப் பார்க்கவந்ததாகச் சொன்னாங்க. பார்த்துவிட்டு இராணியவர்கள் இருந்தா அங்கு போகாமே திரும்பிவிடும்படி சொன்னாங்க. அதனால் நான் உள்ளே விட்டேன்.

சத்தியகீர்த்தி:- எந்த மானையடா உத்தியானத்தில் பார்க்கவந்தாராம்?

சூரன்:- ஐயா! எஜமான்களே! வேட்டை நாய் கொல்லாத ஒரு மானை அவக காப்பாற்றினாங்களாம். அந்த மானைப் பார்க்க வந்தாங்களாம்.

சத்தியகீர்த்தி:- ஏனடா வரகுணவழுதியார் உத்திரவு கொடுத்தார்? நீ விட்டாய். அவர் உத்தியானம் போனார். ஆனால் இராஜகுமாரத்தி முன்னால் போகவேண்டாமென்றார். இதற்குமேல் உனக்கு என்னடா தெரியும்?

சூரன்:- எஜமான்களே அப்பால் ஒன்றுமே எனக்குத் தெரியாது.

சத்தியகீர்த்தி:- சரி நீ போ. சேவகா மதுரைவீரனைக்கூப்பிடு.

சேவகன்:- மதுரைவீரன்; மதுரைவீரன்; மதுரைவீரன்

(மதுரைவீரன் பிரவேசம்)

சத்தியகீர்த்தி:- அடே மதுரைவீரா! நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதில் சொல்வதாய் சத்தியம் செய்.

மதுரைவீரன்:- எசமான்களே! எங்க கொலதெய்வம் சாக்கியாய் நிசமே சொல்லறேன்.

சத்தியகீர்த்தி:- வரகுணபாண்டியர் கொலை விஷயமாய் உனக்கு என்னடா தெரியும்?



மதுரைவீரன்:- இன்று பொளுதேடே புசுப செடிகளுக்கு நானும் முத்துவீரனும் தண்ணி கட்டிகிட்டு இருந்தோம். ஏதோ பொத்தின்னு சத்தங்கேட்டது; சொட்டுன்னு ஏதோ விளுந்துச்சு. சின்ன மவாராசா கூ கூ இன்னுட்டு கூச்சப்போட்டாங்க. வேலையை விட்டுப்போட்டு நாங்க ஓடினோம் அங்கிட்டு. சேனாதிபதி எசமாங்க ஒரு கம்பை ஓசக்கப்புடிச்சுக்கிட்டு நின்னாங்க. அதிலிருந்துகிட்டு நத்தம் சொட்டு சொட்டுனுகிட்டு விளுந்துச்சு. சின்ன மவாராசா அவகளைச் சேத்துப் பிடிச்சுக்கிட்டு இருந்தாங்க. நாங்க போனமோ இல்லையோ சேனாதிபதி எசமாங்களை எங்கவசம் ஒப்பித்துவிட்டு அவுகளையும் எங்களையும் கூட்டிகிட்டு மவாராசா சவைக்கு சின்னராசா வந்துட்டாங்க.

சத்தியகீர்த்தி:- ஏனடா மதுரைவீரா! சேனாதிபதியார் ஒன்றுமே பேசவில்லையா?

மதுரைவீரன்:- அவுங்க ஒன்றுமே பேசவில்லை.

சத்தியகீர்த்தி:- அவர் தப்பித்துக்கொண்டோட ஏதேனும் பிரயத்தனம் செய்தாரடா?

மதுரைவீரன்:- அவுங்க ஒன்னுமே செய்யவில்லை. ஏதோ அப்புதம் கண்டவுங்க போலே புஞ்சிறுப்பு சிரிச்சிகிட்டே சொன்னபடியெல்லாம் செஞ்சாங்க.

சத்தியகீர்த்தி;- ஏனடா சுந்திரகுமாரர் அதுசமயம் எப்படியடா இருந்தார்.

மதுரைவீரன்:- ரொம்ப கோவமும் பரபரப்புமா இருந்தாங்க எசமான்களே.

சத்தியகீர்த்தி:- ஏனடா நீங்கள் போனபோது அவர் சேனாதிபதியை இறுகப்பிடித்துக்கொண்டிருந்தாரே. அப்பொழுதாவது சேனாதிபதியார் திமிறியோட முயன்றதாக சுந்திரகுமாரர் சொன்னதுண்டோ?

மதுரைவீரன்:- அப்படியொன்றும் சொல்லலை.

சத்தியகீர்த்தி:- நீங்கள் போனசமயம் அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்ததா?

மதுரைவீரன்:- ஒன்னும் அப்படி நடக்கவில்லை, சின்ன ராசா சும்மா படபடப்பா இருந்தாங்க.

சத்தியகீர்த்தி:— நாகானந்தர் மண்டையில் அடித்துக் கொன்றதை நீங்கள் பார்த்ததுண்டா?

மதுரைவீரன்:— நாங்கள் நேராய்ப் பார்க்கவில்லை. ஆனா அவுகதான் கொன்னான்னு சொல்லலாம்.

சத்தியகீர்த்தி:— ஏனடா அப்படிச் சொல்லலாம்?

மதுரைவீரன்:— அவுங்கதான் கம்பு புடிச்சுக்கிட்டிருந்தாங்க. அதிலிருந்துதான் ரத்தம் சொட்டிச்சு.

சத்தியகீர்த்தி:— மதுரைவீரா நீ போகலாம். சேவகா! முத்துவீரனைக் கூப்பிடு.

சேவகன்:— முத்துவீரன்; முத்துவீரன்; முத்துவீரன்.

(முத்துவீரன் பிரவேசம்.)

சத்தியகீர்த்தி:- முத்துவீரா! உண்மையே பேசுவதாய் சத்தியம் செய்.

முத்துவீரன்:— எங்க கொலதெய்வம் நொண்டிக்கருப்பன் ஆணை உண்மையே சொல்லுகிறேன்.

சத்தியகீர்த்தி:— ஏனடா வரகுணபாண்டியர் இறந்த இடம் நீ போகவேண்டிய காரணம் யாது?

முத்துவீரன்:— எசமாங்களே! நானும் மதுரைவீரனும் பூச்செடிகளுக்கு தண்ணிகட்டிகிட்டு இருந்தோம். சின்ன ராசா சத்தமிட்டாங்க; ஓடினோம்.

சத்தியகீர்த்தி:— அங்கு என்னடா பார்த்தாய்?

முத்துவீரன்:— சேனாபதி எசமாங்களை சின்னராசா புடிச்சுக்குட்டு இருந்தாங்க. சேனாபதியவுக கையிலே கம்பு இருந்துச்சு. ரத்தம் சொட்டுசொட்டுன்னு கிட்டுவிளுந்துச்சு. அவுக காலின் கீழே பெரியராசா செத்துக்கிடந்தாங்க.

சத்தியகீர்த்தி:- யாரடா அவரை கொன்றிருப்பார்கள்?

முத்துவீரன்:- கைப்புண்ணுக்கு கண்ணாடியா எசமான்களே! சேனாபதிதான் கொன்னான்னு சொல்லணும்.

சத்தியகீர்த்தி:— என்னடா! அவர் கொன்றதை கண்ணால் பார்த்தாயா?

முத்துவீரன்:— பொய்யா சொல்லரது. நாங்க கண்ணாலே பார்க்கலே.



சத்தியகீர்த்தி:— சுந்திரகுமாரருக்கும் நாகானந்தருக்கும் ஏதேனும் சச்சரவு நடந்ததா?

முத்துவீரன்:— ஒன்றுமில்லை எசமான்களே.

சத்தியகீர்த்தி:— நாகானந்தர் அதிக கோபமாய் இருந்தாராடா?

முத்துவீரன்:— அவுங்க எங்கே கோவுச்சுக்கிட்டு இருந்தாங்க? இல்லை. சின்னராசாவுக்குத்தான் ரொம்ப கோபம்.

சத்தியகீர்த்தி:— அவர்களுள் யாராவது ஏதாவது உங்களிடம் சொன்னார்களா?

முத்துவீரன்:— அவுக ஒன்னுமே பேசலே. நாங்கள் போனோம். சேனாபதி எசமாங்களை எங்களிடம் விட்டு சின்னராசா முன்னே போனாங்க. பின்னாலேயே அரமனை வந்துட்டோம்.

சத்தியகீர்த்தி:— சரி; போய் வா. சேவகா! முத்துமாலையை அழைத்து வா.

(தொடரும்)

---

"லக்ஷிமி"

ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்தித்துணுக்குகள் முதலியன நிறைந்தது. எளியசெந்தமிழ். அழகிய அட்டையுடன் கூடியது. அதிகப் பக்கம், குறைந்த சந்தா. ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது.

சந்தா உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு 1—8—0.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "லக்ஷிமி" ஆபீஸ்,

திருநெல்வேலி ஜங்ஷன்.

# தேவை.

சித்தன் பத்திரிகை விற்பனைசெய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும், முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும், செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள்தேவை. தக்க கமிஷன்கொடுக்கப்படும். ஒரு அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

### சந்தாதாரர்களுக்கு

சித்தனுக்கு கடிதம் எழுதும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் சந்தாநம்பரை தவறாமல் எழுதவேண்டும். நம்பர் குறிக்கப்படாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "சித்தன்" பழனி.


## ரூ. 2-12-0-க்கு
## கீழ்கண்ட இனாம் சாமான்களுடன்




மூன்று கடிகாரங்கள், 3-89 விநோத வெகுமதிகள்.

எட்டு ஒட்டோதில்குஷ் பாட்டல்தருவிப்பவர்களுக்கு கோல்டு கில்ட் டம்மி ரிஸ்ட் வாட்ச் 1, ரயில்வே டயம் பேபீ கடியாரம் 1, பீ டயம் பீஸ்1,(NBஐந்துவருஷம்க்யாரண்டி.) 14-க்யாரட் தங்கநிப் பவுண்டன் பேனா 1, முத்து நிக்லஸ் மாலை 1, ரோல்டுகோல்டு மோதிரம் 1. (NBதங்கள்பேயர் செதுக்கி அனுப்பப்படும்.) 100-கெஜதூரம் வெளிச்சம்கொடுக்கும். டார்ச் லைட் 1, பேபருமாலு 1, சீப்பு 1, முகம்பார்க்கும் கண்ணாடி 1, ரூபாய் 1—12—0 அனுப்பவும்

பாக்கிங் போஸ்டேஜ் சார்ஜ் ரூ 0—14—0 பிரத்தியேகம்.

**Dutta & Co., 15/1, Joymittar St.**
**Hatkhola Po. Calcutta.**

(SDN)


# செய்தித் திரட்டு.

## பாம்பை விழுங்கும் எலி.

பர்லினிலுள்ள மிருகக் காட்சி சாலையில், பாம்பைத் தின்னும் பயங்கரமான எலி ஒன்று வளர்க்கப்படுகிறதாம். இதன் நீளம் 6-அடியாம். பிரேசில் நகரத்தில் பிடிக்கப்பட்டதாம். பாம்பின் விஷம் அதை ஒன்றும் பாதிப்பதில்லையாம். எந்தப் பாம்பையும் கழுத்தைப்பிடித்து நெறித்துக் கொன்றுவிடுகிறதாம்.

.... ... ...

பிரான்ஸ் எய்கிஸ் ஆன்ப் ரோவானிஸ் என்ற நகரில் இருக்கும் ஒரு கன்னிகா மடத்தில் முக்கிய தாயாராகவிருக்கும் கன்யாஸ்திரீக்கு இப்போது 100-வயதாகிறதாம். ஆயினும் இன்னும் அவர் ஓய்வு எடுத்துக்கொள்ளாமல் வேலை செய்து வருகிறாராம்.

... .... ....

பலநாளாய் யோசனையிலிருந்த விபசார தடைமசோதா மைசூர் சட்ட சபையில் நிறைவேறிவிட்டது.

.... ... ....

## குவெட்டாவில்

கம்பங்களை எதிர்த்து அழிவில்லாமல் நிற்கக்கூடிய கட்டிடங்களை கட்ட ஒருகோடியே 32-லக்ஷம் ரூபாயில் சர்க்கார் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். அவ்வேலை 1938-ல் முடிவடையுமாம்.

... .... ....

நார்த் அம்பர்லண்டைச்சேர்ந்த பிளைத்திலுள்ள 72வயதுள்ள ஒரு பாட்டிக்கு விவாகம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாம். மிஸஸ் மார்காட் ஜாய்ஸ் என்ற அப்பெண்ணுக்கு இது இரண்டாம் விவாகமாம். ஏற்கனவே அவளுக்கு 7-பேரப்பிள்ளைகளும், 5-கொள்ளுப் பேரப்பிள்ளைகளும் விவாகமான குமரிகளும் இருக்கின்றனராம்.

இந்தியாவில் தற்காலம் 2400-ஜாதிப்பிரிவுகள் இருக்கின்றனவாம்.

.... .... ...

தமிழ் நாடக உலகிலும், பேசும்படங்களிலும் சிறந்த நடிகையாய் விளங்கிய ஸ்ரீமதி T. S. வேலம்மாள் மதுரையில் சென்ற 12-7-36-ல் பிரசவவேதனையின்பின் ஏற்பட்ட ஜன்னி உபாதையால் உயிர்நீத்தார். சகுந்தலா, சுபத்ரா பரிணயம், அதிரூப அமராவதி, கிருஷ்ணநாரதி, கபீர்தாஸ் முதலிய பேசும் படங்களில் முக்கியஸ்தராய் விளங்கினர்.

... ... ...

### பெண் ஆண் ஆனாள்.

இங்கிலாந்தில் 30-வயதுவரை பெண்ணாயிருந்த மேரி வெல்டன் இப்பொழுது மார்க் வெல்டன் என்ற பெயருடன் ஆணாய் மாறிவிட்டாளாம். லண்டனில் 2 தடவை அவருக்கு அதற்கு ரண சிகிச்சை செய்யப்பட்டதாம்.

செகோஸ்லோவாகியா என்ற நாட்டில் பந்தாட்டத்தில் கியாதிபெற்ற கொக்கோவா என்ற மாது ரண சிகிச்சை செய்துகொண்டு ஆணாய் மாறி கோலாக் என்ற ஆண்பெயரையும் வைத்துக்கொண்டிருக்கிறாராம்.

.... ... ....

### யானையைத் தாங்கும் கண்ணாடி.

பிரிட்டனில் "ஆர்மர்பிளேட்" என்ற பெயருடன் அழுத்தமான கண்ணாடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இதன் பலத்தைச் சோதிப்பதற்காக இக் கண்ணாடித் தட்டிலிருந்து ஒரு பலமான பலகைமேலே தொங்கவிடப்பட்டது. அதன்மீது 3-குட்டியானைகளும் 3-மனிதர்களும் ஏறிநின்றனராம். 5-டன் எடையுள்ள பாரமிருந்தும் கண்ணாடி வளைந்ததேயன்றி உடையவில்லையாம்.

.... .... ...

சிறைதசத்து காவன்லோ என்னும் மாஜி ராணுவ அதிகாரி தினசரி கீழ்க்கண்டவாறு உணவருந்துகிறாராம்:—

1. 15-ராத்தல் ஆட்டிறைச்சி.
2. 3-ராத்தல் பன்றி இறைச்சி.
3. 50-முட்டைகள்.
4. [illegible]
5. 100-வாழைப்பழம்.
6. 1-புஷல் அரிசி.
7. 10-மாம்பழம்.

“ஸபாரதி”
தமிழ் மாதப் பத்திரிகை.
தனிப்பிரதி காலணா.
எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.
ஸபாரதி ஆபீஸ்,
72, பாலேஸ் ரோட், மதுரை.

“வம்பன்”
கதைகளும், விகடங்களும் சித்திரப் படங்களுடன் கூடிய செந்தமிழ் மாத வெளியீடு.
பாலர்முதல் விருத்தர்வரை ஆண் பெண் யாவரும் விரும்பும் கட்டுரைகள் பல செறிந்து விளங்கிப் படிப்போர்களை என்றும் மகிழச்செய்யும்.
ஆசிரியர்:— த. இராமநாதம் பிள்ளை.
தனிப்பிரதி அணா 2.
உள்நாடு வருட சந்தா ரூ. 1-4-0.
மலாய்நாடு ஷை ரூ. 2-0-0.
வம்பன் ஆபீஸ், 304 வால்டாக்ஸ் ரோடு,
பி. டி. மதராஸ்.

“நவீனம்”
ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை
ஆராய்ச்சி கட்டுரைகள், முதுமொழிகள், சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன கொண்டு நாவல் தொடர் கதையாக வெளிவரும் ஓர் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.
சந்தா உள்நாடு ரூ. 1-0-0. வெளிநாடு ரூ. 1-8-0.
“நவீனம் ஆபீஸ்”
வேப்பேரி, மதராஸ்.

ஞானமுள்ள பெற்றோர்
தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

**சிறுவர் அறிவுக்கதிர்.**

இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப்பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித்துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக்கொண்டது. மாதிரிக்காப்பிக்கு ஐந்து காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா உள்நாடு 12 அணா. வெளிநாடு 1—4—0.

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:— சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு. (தென்னிந்தியா.)

**புது உலகம்.**

ஓர் நவீன ஆராய்ச்சி சஞ்சிகை.

பல அறிஞர்களுடைய கட்டுரைகள், உலக நிகழ்ச்சிகள், தத்துவஞான, விஞ்ஞான பொருளாதாரக் குறிப்புகளும் கொண்டது.

சந்தா உள் நாடு ரூ. 1—8—0 வெளிநாடு 2-வெள்ளி.

"புது உலகம்" ஆபீஸ், ஜார்ஜ்டவுன், சென்னை.

தேவை! ஏஜண்டுகள் தேவை!!

**"ஜகன் மோகினி"**

மாதாந்த நாவல் சஞ்சிகை.

13-வது ஆண்டு நடக்கிறது. ஜீவிய சந்தா ரூ. 25.
வருஷ சந்தா ரூ. 1—8—0. தனிப்பிரதி அணா 2.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனம்! இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனமாக அளிக்கப்படும்.

ஜெகன்மோகினி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

அச்சமற்ற கண்டனம்! —
— ஆணித்தரமான அபிப்பிராயம்!!

ஏழை, பணக்காரர் வேற்றுமையற்றது, பாரதநாட்டின் தொழில், பொருள் அபிவிருத்திக்கு உழைப்பது, தொழிலாளர் நலன் நாடுவது,

**"விஸ்வ பந்து"**

பத்திரிகையே.

ஆசிரியர்:- தி. ம. நடராஜன், அவர்கள்.

இதனை ஆதரிப்பது உங்கள் கடமையல்லவா?

வருட சந்தா
உள்நாடு ரூ. 3—0—0. வெளிநாடு ரூ. 5—0—0.
தனிப்பிரதி அணா 0—1—0.

காரியஸ்தர், விஸ்வபந்து, காரைக்குடி.

**"வர்த்தகமணி"**

வர்த்தகசம்மந்தமன விஷயங்களை அடிப்படையாய்க் கொண்டு, நவீன இலக்கியம், காவல், சிறுகதை, ராஜீயம், புராதன சரித்திரசம்பந்தமான விஷயங்களுடன் வெளிவரும்

**மாதவெளியீடு.**

விளம்பரத்திற்குப் பிரதானமானது

வியாபாரம் செழிப்படைய தொண்டாற்றுவதில் எப்பத்திரிகைக்கும் முன்னணியிலிருப்பது.

வருடசந்தா மதுரைக்கு ரூ. 0—4—0.
" இந்தியாவிற்கு ரூ. 0—6—0.
" வெளிநாட்டிற்கு 0—12—0.

தனிப்பிரதி 0—0—3. வெளிநாட்டிற்கு 0—0—6.

மானேஜர், "வர்த்தகமணி" ஆபீஸ்,
ராயகோபுரம் வீதி, மதுரை.

189932

## "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் கொண்ட
வாரப் பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசிய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் துணுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வருட சந்தா ரூ. 4—0—0.

"லோகோபகாரி"
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

## 'அறிவு'

(ஓர் அறிவியல் மாத வெளியீடு)

பாட்டுகள், படங்கள், கதைகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் முதலிய பல அரியவிஷயங்கள் நிறைந்தது.

வருட சந்தா { உள் நாடு ரூ. 1–0–0.
வெளி நாடு ரூ. 1–8–0.

மானேஜர், "அறிவு"
சாத்தன்குளம், திருநெல்வேலி.

## "செங்குந்த மித்திரன்"

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அனுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா:- { உள்நாடு ரூ. 1—8—0.
வெளிநாடு ரூ. 2—0—0.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,

சி. எம். சாமி

## கல்நார் பற்பொடி.

பொறுக்கமுடியாத பல்வலியை
ஒரு நொடியில் நிறுத்தும்

பல்வலி, பல்லில் ரத்தம் வருதல், பல் குத்து, எயிறு சுரத்தல், எயிறு கரைதல், பல் விரைவில் தேய்தல், பற்புழு, அசைவு, கூச்சம், வாய் நாற்றம், தந்தசூலை, வாயில் நீரூறல் முதலிய சகல தந்த நோய்களையும் நீக்கி, பற்களுக்கு உறுதியையும், ஒளியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். இதை விடாது பல் துலக்கிவந்தால் ஆயுள்வரை பற்கள் விழாதபடியும் கெட்டிப்படுத்தும்.

பாக்கட் 1-க்கு விலை அணா 1.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி.

## "கிராம ஊழியன்"

(மாதம் இருமுறை வெளிவரும்)

இந்திய விவசாயிகளின் முன்னேற்றம் ஒன்றையே பெருநோக்கமாகக் கொண்டு கடல் கடந்த இந்தியர்களின் அபிவிருத்தியை நாடி உழைப்பது. சாதி சமய பேதங்களை வெருட்டி சமதர்ம ஒற்றுமையை நாட்ட முற்படுவது. பொதுஜன ஸ்தாபனங்களில் ஏற்படும் சீர்கேடுகளை அரசன், ஆண்டி என்ற வித்தியாசமின்றி, அச்சமற்ற கண்டனங்களாலும், ஆணித்தரமான பதில்களாலும், தயை தாக்ஷணியம் இன்றி நிர்தாக்ஷணயமாய் எடுத்துக்காட்டி சீர்திருத்த முயல்வது. கிராமப் புனருத்தாரணத் திற்காகவே தோன்றியது.

ஆயிரக்கணக்கான கிராமங்களில் உலவிவருவது. விளம்பரக்காரர்களுக்குத் தக்க ஊதியம் அளிப்பது. வேண்டுவோர் எழுதுக.

வருட சந்தா. உள் நாடு ரூ. 2. வெளி நாடு ரூ. 3.

மானேஜர், கிராமஊழியன் ஆபீஸ்,
துறையூர், திருச்சி ஜில்லா.